KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஞு அக்டோபர் மீ 11உ [No. 40

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 625

2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன்தூதுப் படலம். 627

3. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 630

4. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A., B.L. 634

5. தற்காலக் கொள்கைகளுந் தமிழும்
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 635

6. அப்பர் (64-கலை இதிகாசம்-பாண்டவகௌரவர்)
E. N. தணிகாசல முதலியார் B.A., B.L. 637

7. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 10-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 638

8. வர்த்தமானம் 640

கலாநிலயம்

எத்தைக் கண்டு இச்சை கொள்வோம் 8.

தாமும் எதனையோ சாதித்து அதனையே மற்றவர்களும் சாதித்துக்கொள்வதற்கு உதவியாகுமாறு பூதசாஸ்த்திர ஆராய்ச்சித்துறையில் ஆழ்ந்திருக்கும் ஸர். ஸி. வி. இராமன், எழுதிய கட்டுரையைக் கண்டோம். இந்திய ஆராய்ச்சியாளர் ஒருவர் அவ்வாருக, இனி, இந்தியச் செய்கையாளர் ஒருவர், தற்காலத்து இந்திய அன்னையின் வீரப்புதல்வர்களுக்குத் தலைவராய் நிற்பவர், ஜாவர்லால் நேருவும், வில் ரோன்டின் கடிதத்திற்கு விடை தந்திருக்கின்ருர். தமது மனநிலையை மறைக்காமலும், உண்மையை உரைப்பதற்குக் கூசாமலும், அவரைக்கொண்டு ஏனையோர் தம் ஊக்கமுடைய முயற்சிகளைச் சோதித்துக்கொள்வதற்கு உதவியாகவும், அமைந்திருக்கின்ற இவர்கடிதம் பல வகைகளில் பாராட்டற்குரியது. இவர் பின்வருமாறு எழுதி யிருக்கின்ருர்:—

"அன்புடைய மிஸ்டர் ரோன்ட்,

உங்கள் கடிதம் மனத்தைக் கவர்கின்ற கேள்விகளை விளைவிக்கின்றது. அவை மனதைக் கவர்வதோடு அதனை நடுங்கும்படியும் செய்கின்றன. ஏனெனில், நீங்கள் காட்டியிருக்கின்ற காரணங்களின்படி, இவ்வுயிர்வாழ்க்கையெல்லாம் வீண் என்றும் மானுட முயற்சியெல்லாம் உபயோகமற்றதென்றும் எண்ணித்தான் தீரவேண்டி வருகின்றது. என்னை இக்கேள்விகள் கேட்பதால் எனக்கு மிக்க கவுரவமளித்தீர்; ஆயினும், அவைகளுக்குப் பதில் சொல்ல எனக்குத் திறமையில்லை யென்பதை நான் உணர்கின்றேன். தற்பொழுது எனக்குப் போதிய நேரமும் ஓய்வும் வாய்க்கவில்லை; வாய்த்தாலும், உங்கள் கேள்விகளுக்குரிய விடைகளை ஆராய்ந்துரைப்பது மிகவும் கஷ்டமான காரியம்.

இந்தியர்கள், தத்துவ ஆராய்ச்சிகள் செய்வதில் இன்பம் பெரிது காண்பவர் என்று கருதப்படுகின்றனர். ஆயினும் நானோ, அவை என் மனதைக் குழப்புவதன்றி, எனக்கெவ்வித அமைதியையும் தருவதேனும், மேலே இயற்றவேண்டிய காரியங்களுக்கு வழிகாட்டுவதேனும் இல்லை யென்பதை நெடுங்காலத்திற்குமுன்னரே கண்டுகொண்டேனாதலால், அத்தத்துவ ஆராய்ச்சிகளுக்கு அருகு நெருங்காமல் என்னை விலக்கிக்கொண்டவனாயினேன். சமயத்தினிடத்தில், அதற்கமைந்த குறுகிய பொருளில், என் மனம் நாடியதில்லை. பூதசாஸ்த்திரங்கள் பலவற்றை அங்குமிங்கும் ஒருவாறு மேல்எழுந்தவாரியாக யான் சிறிது பயின்றதுண்டு. அதனிற் சிறிது இன்பமும் கண்டேன்; எனது பார்வை விசாலமடைவது போலவும் தோன்றியது. ஆயினும், எல்லாவற்றிலும் சந்தேகமுடையவனாய் ஒன்றிலும் ஊன்றாமல் மிதந்துகொண்டே இருந்தேன்; ஒருவாறு வெறுத்த மனமுடையவனாகவும் இருந்தேன்; பொது உடைமையையும் தேசிய நன்மையையும் சார்ந்தனவான நோக்கங்கள் என்னைப்பற்றிக்கொண்டன. ஆயினும், முதலில் அந்நோக்கங்களின் தன்மை எனக்குத் தெளிவாக இல்லை; பிறகு அவை வரவர ஒன்றுசேரவும், இந்தியாவின் விடுதலையை ஆர்வமுடன் விரும்புகின்றவனாயினேன். இந்தியாவின் விடுதலை, தேசிய விடுதலையை மாத்திரமே குறிப்பதன்றி, இந்நாட்டின் இலக்ஷக்கணக்கான ஆடவர்களையும் மாதர்களையும் துன்பத்தினின்றும் பிறரால் கொள்ளையடிக்கப்படுவதினின்றும் காப்பாற்றும் காரியமாக எனக்குத் தோ

ன்றியது. உலகடங்கடலும், வலியோரால் கொள்ளையடிக்கப்படுகின்ற துயரத்தின் அறிகுறியே இந்தியா என்னும்படி ஆயிற்று. ஊன்றிய எனது தேசப்பற்றை, இப்படிக் கொள்ளையடிக்கப்படுகின்ற எல்லாத்தேயத்தவரும் எல்லா ஜனங்களும்அடங்கிய உலகப்பற்ருகவே மாற்றிக்கொள்ள முயன்றேன்.

இந்தஎண்ணங்கள் என்னை உழக்கின; யாதும் என்னால் செய்யஇயலாமலிருப்பதையும்உணர்ந்தேன்.என்னுடைய இதயம் அவாவிய இதனை அடைவதற்கு வழி யொன்றும் இருப்பதாக எனக்குத்தென்படவேயில்லை. பிறகு மிஸ்டர் காந்தி வந்தார்; வந்து, பயன்படக்கூடுமென்று தோன்றியவொருவழியையெனக்குக்காட்டினர்.எவ்வாருயினும்அவ்வழி அனுசரித்துப் பார்க்கத்தகுந்தது; அடைபட்டிருந்த எனது உணர்விற்கு அதுஒரு போக்குங் காட்டித்தந்தது. அவ்வழியில் முழுகினேன்; முழுகி, நெடுங்காலம் நான் தேடியிருந்ததைக் கடைசியில் கண்டுபிடித்துவிட்டேன் என்பதைத் தெரிந்துகொண்டேன். எனக்கு அருமையாயிருந்த வொரு பெரிய காரியத்தின்பொருட்டுச் செய்கைகளை மேற்கொள்வதில் நான் இதனைக் கண்டேன். அந்த நாள்முதல் இந்தக்காரியத்தைச்சாதிக்கும்பொருட்டுநான் என் சக்தியையெல்லாம் செலுத்தியிருக்கின்றேன். எனக்குக் கிடைத்திருக்கின்றபிரதிபலனும் என்னை வலிவுசெய்திருக்கின்றது. புதிய அர்த்தமும் பயனும் உடையவொரு நிறைந்தவாழ்க்கையே யான்பெற்ற வெகுமதியாக இருக்கின்றது.

இதுவோ, நீர் கேட்டிருக்கின்ற கேள்விக்கு விடையாகாது. ஆயினும், செய்கைத்திறத்தில் ஈடுபட்டிருக்கின்ற நான் தத்துவ சாஸ்த்திரி யல்லனுகையால், தர்க்கமுறைப்படி சாஸ்த்திரோக்தமான விடைகொடுக்க எனக்கு இயலாது. பூதசாஸ்திரங்களிலும் தர்க்கங்களிலும் அறிவிலும் நம்பிக்கை வைத்திருந்தேன்,இப்பொழுதும் வைத்திருக்கின்றேன்; ஆயினும் அவைகளில் ஏதோ குறையிருப்பதுபோலவும்,இவ்வாழ்க்கையானது அவைகளைக்காட்டிலும் வலிமையுடையபிறசக்திகளினுல் ஆளப்படுவதுபோலவும் தோன்றுகின்றது. உள்ளுணர்வு, அல்லது தடுக்கமாட்டாவகை நம்மை யேதோவொன்றினிடத்தில் உய்த்துச்செல்லும் ஒருசக்தி,நாம் அறிந்தபடி சாஸ்திரங்களுடனும் தர்க்கத்துடனும்தற்காலத்தில்பொருந்தக்கூடியதாகத் தெரியவில்லை. எண்ணியவைகள் கைகூடாமல்போனவைகளைத் தெரியக்காட்டும்சரித்திர நூல்களும்,பண்டைக்காலத்தில் பெரியோர்களெல்லாம் முயன்று பெரிய பெரிய காரியங்களைச்செய்திருந்தும் தொலையாமல் இன்னும் இவ்வுலகில் தீமைகள் இருந்துவருவதும், நாகரிகமும் அதன் பழைய குறிக்கோள்களும் தற்காலம் சிதைந்து கிடப்பதும், எதிர்காலத்தில் பதுங்கியிருக்கும் ஆபத்துக்களும், ஒவ்வொருவேளை நான் மனம் சலிக்கும்படி செய்கின்றன. எனினும் இவைகளெல்லாம் கிடக்க, மனித இனத்திற்கும் எனது நாட்டிற்கும் வரப்போகின்ற எதிர்காலம் நன்னம்பிக்கை நிறைந்திருக்கின்றதென்றும், நாம் விடுதலைக்காக இந்தியாவில் செய்கின்ற இப்போராட்டமானது அந்நம்பிக்கை கைகூடுவதற்காகவே நம்மைச் செலுத்துகின்றதென்றும் உணர்கின்றவோர் உணர்ச்சி என்னிடத்துஇருக்கின்றது. ஆயினும் எனக்கிருக்கும் இவ்வுணர்ச்சிக்கு ஆதாரம் காட்டும்படிஎன்னைக்கேட்காதீர். ஏனெனில்அதற்குப்போதிய காரணம்ஒன்றுங்காட்ட என்னால்இயலாது. பெரியதொரு காரியத்திற்கு என்னால் இயன்றதைச் செய்கின்றேன் என்றும், என்முயற்சி வீணாக முடியாதென்றும் எண்ணுகின்ற அவ்வெண்ணத்தினில்,மனத்தின் சமநிலையும் வலிமையும் ஊக்கமும் யான்கண்டுகொண்டேன் என்னும்அளவுதான் நான்உகங்ளுக்குச் சொல்லக்கூடும். பலனைக் கருதித்தான் நான் பாடுபடுகின்றேன். நான் நாடியஇடத்திற்குவேகமாகவே செல்லவேண்டுகின்றேன். ஆயினும், அடிப்படையாகப் பார்க்குங்கால்என்னுடைய செய்கையின் பயனைப்பற்றிய கவலை என்னை அதிகம் கலக்குவதில்லை. செய்கையே, அது செம்மையான செய்கை என்னும் நிச்சயம் எனக்கு இருக்கும்வரையில், எனக்குத் திருப்தி யளிக்கின்றது.

இவ்வாழ்க்கையில் பொதுவுடமை நோக்கமுடையவன் நான். இந்தியாவிலும் உலகடங்கலுமே பொதுவுடைமை முறை நிறுவப்பெறுவதைக் காண விரும்புகின்றேன். உலகம் முற்றிலும் செம்மையாயினபிறகு என்ன நேரும் என்பது எனக்குத் தெரியாது—அதைப்பற்றி எனக்கு அதிகம் கவலையுமில்லை. இப்பொழுது செய்வதற்கு வேண்டிய அளவு இருக்கின்றது; எனக்கு அதுவே போதும். எந்தக் காலத்திலேனும் இவ்வுலகம் முற்றிலுமே செம்மையாகுமோ, அல்லது இப்பொழு திருப்பதைக்காட்டிலும் நல்லதுதான்ஆகுமோ என்றகேள்விக்குப் பதில்சொல்ல நான் துணியமாட்டேன். ஆயினும்இவ்வுலகைத் திருத்தியமைப்பதற்குச் சில செய்யலாம் என்று நான் நம்பி எதிர்பார்ப்பதால், தொடர்ந்து செய்துகொண்டு வருகின்றவனு யிருக்கின்றேன்.

இவ்வாழ்க்கையின் பொருளோ அல்லதுபயனே என்னவென்று நீர் கேட்டிருக்கின்ற முக்கிய கேள்வியைப்பற்றி யாதும் கூருமலே அகன்றுவிட்டேனென்று எண்ணுகின்றேன். நான் இவ்வாழ்க்கையை எப்படிக்கருதியுள்ளேன் என்பதைப்பற்றியும், நான் செய்கிறவைகளை மேற்கொள்ளும்படி என்ன நோக்கங்கள் என்னைத் தூண்டியிருக்கின்றன என்பதைப்பற்றியும்சொல்லும் முகத்தாலன்றி உம்முடைய கேள்விக்கு விடைகூற என்னால் இயலாது.

இப்படிக்கு
ஜாவர்லால் நேரு.

இவ்விந்தியா தன்விடுதலைக்கோர்ஆதாரமாக எதிர்நோக்கி யிருக்கின்ற இப்பெருமகனுடைய கடிதம், யாதும் ஒளிப்பதின்றித் தன் உள்ளக்கருத்தைக் கூறியிருக்கின்ற வாய்மையினால் பெருமையடைகின்றது. இந்த வுலகம் செம்மை யடையுமோ, அடைந்தபின் யாது நேருமோ, என்பது தனக்குத் தெரியாமலிருந்தும்,குறையா ஊக்கமுடன் தன்னுடைய பெரிய நோக்கம் கைகூடும்படி முயலும் இம்முறைமையே முதிர்ந்த வீரர்களின் இலக்ஷணம். சிந்தித்துச் சிந்தித்து ஒன்றும்எட்டாமையால் விளைகின்ற சோர்வினின்று தப்பும்பொருட்டுச் செய்கையினுள் தஞ்சம்புகுகின்ற தன்மைய தன்று இது. அந்தச் செய்கை எதனையும் எதிர்பார்க்காது, ஒன்றிலும் நம்பிக்கை வைக்காது. அச் செய்கையிலேயும் அது நம்பிக்கைவைத்த லருமை. ஜாவர்லால் நேரு தான் செய்கின்ற கருமத்தில் நம்பிக்கையுடையவரா யிருக்கின்ருர். இந்நம்பிக்கை வைத்தபின் அதன் முடிவைப்பற்றிக் கவலை கொள்ளாமலிருத்தலே உத்தமமான மனநிலையாம். தன்னை விட விசாலமான வொரு நோக்கத்தைப் பின்பற்றி முயல்தல்தான்பெருந்தகை மனமுடையார் மாண்பு. வாழ்க்கை, பொருளும் பயனும் உடையதாதல் அதனாற்ருன்.நாம் விழைகிறபடி உலகம் சீர்திருந்துமோ

திருந்தாதோ என்கிற சந்தேகம் எழுவது நன்றன்று. நாம் விழைகின்ற அந்நிலை செவ்வியது என்ற வொரு நம்பிக்கையால் நம் உள்ளுணர்வு ஊக்கம் கொடுக்குமானால், அதன்படி முயற்சி செய்வதே ஆண்மை. நம் ஜாவர்லால்நேரு இவ்வாண்மையை எடுத்துக் காட்டுகின்றார். இவ்வாண்மையின் அறிவைக் கிரேக்க வித்தகர் ப்ளேட்டோவிற் காணல்வேண்டும். "நீ விரும்பியபடி இவ்வுலகம் சீர்திருந்திவிட்டதென்றே பாவித்து அந்நிலைக்கு ஏற்றவாறு உன்வாழ்க்கையை அமைத்து நடத்துவாய்" என்பார் அவர்.

ஸர். ஸி. வி. இராமன் கடிதத்தையும் ஜாவர்லால் நேருவின்கடிதத்தையும் அயலயல் வைத்து நோக்கும்போது இவைஇரண்டிற்குமிடையேஉள்ளவேற்றுமை மலையிலக்காகத் தென்படும். வில் ரோன்ட் கேட்டுள கேள்விகளுக்கு ஏற்ற விடையாகக்கூடிய கருத்துக்கள் ஒன்றுமே தன்னிடத்தில் இல்லை யென்பது தெரியாமல் மறைக்கவேண்டும் என்று முயன்றதுபோல் அமைந்திருக்கின்றது அப் பூதசாஸ்த்திரநிபுணரின் கடிதம். ஆயினும்அவர் விடையே கூறுவதாகஎண்ணும்படி எழுதியிருக்கின்றார். ஜாவர்லால் நேருவோ, அக் கேள்விகளுக்குத் தன்னால் விடையெழுத இயலவேயில்லை என்று விளம்பிக்கொண்டே, தன்னையும் அறியாமல், போதியவிடை பாராட்டத்தகும் வகையில் வரைந்திருக்கிறார். அன்றியும், ஸர். ஸி. வி. இராமன் தம்முடைய வாழ்க்கையைப் பற்றியேனும் பிரபஞ்ச வாழ்க்கையைப் பற்றியேனும் யாதேனுஞ் சிந்தித்து இருப்பாராயின், நன்று, அதனை வில்ரோன்டிற்குப் பதில் எழுதியஅக்கடிதத்தின் மூலமாக நமக்குத்தெரியப்படுத்தவில்லை. சிந்தனையைத்தெரிவிக்காத அவரும் செய்கையை வற்புறுத்துகிற இவரும் இன்னவாறு வேற்றுமைப்பட நிற்பினும், கடவுளையும் கடவுளைச் சார்ந்த சமயஉணர்வையும் மாற்றவள் மக்கள்போல் நடத்தும்வகையில் ஒவ்வுகின்றனர். சிந்தனையின் ஆழமும் செய்கையின் ஆர்வமும் ஒருங்கே இணங்கப் பெற்றவர் மகாத்மா காந்தி. ஜாவர்லால் நேருவிற்கு வழிகாட்டிய இவரும் வில்ரோன்டிற்குப் பதிலெழுதியிருக்கின்றார். அதனைப் பார்ப்போம்:—

அன்புடைய நண்பரே,

உங்கள் கடிதம் கிடைத்தது. நீங்கள் கேட்டிருக்கும் கேள்விகளுக்குப் பதில் பின்வருமாறு—

(1) தெய்வ தத்துவத்தின் ஒரு பொறியே இவ்வுயிர் என்று நான் நம்புவதால், அது எனக்கு மெய்ம்மையாகவே தோன்றுகின்றது.

(2) உலகம் அனுசரிக்கும் பொருளிலல்லாமல் அகன்ற பொருளில் சமயவுணர்வானது, தெய்வ தத்துவத்தின் ஸாரத்தை நான் ஒருசிறிது காட்சிகொள்வதற்கு உதவிசெய்கின்றது. தரும உணர்ச்சி முற்றிலும் முதிராமல் இந்தக் காட்சிகொள்வது சற்றேனும் இயலாது. ஆதலின், சமயமும் தருமச்செம்மையும் எனக்கு, ஒரே பொருளுடைய மொழிகளாகவே தோன்றுகின்றன.

(3) முழுவதும் கைகூடுவதற்கு முயல்கின்ற முயற்சியே என்னுடைய வாழ்க்கையை நடத்திவைக்கின்றது.

(4) எனக்கிருக்கின்ற தெய்விக ஊக்கமும் (Inspiration) சக்தியும் (Energy) எவ்வளவேயாயினும், அவை தாம் இந்த விடாமுயற்சியினின்றே சுரக்கின்றன.

(5) குறிக்கோள் முன்னரே கூறியாகிவிட்டது.

(6) என்னுடைய ஆறுதலும் (Consolation) என்னுடைய இன்பமும் (Happiness), உயிருள்ள பிராணிகள் என்று இருப்பவைகளுக்கெல்லாம் செய்கின்றதொண்டில் காணப்படுதல் வேண்டும். ஏனெனில், எல்லாவுயிர்களின் மொத்தத் தொகையே தெய்வதத்துவத்தின் சாரமாம்.

(7) இருளிற்கும், தீமையின் சக்திகள் எல்லாவற்றிற்கும், எதிராகப் போராடுவதில் எனது பொக்கிஷம் அடங்கியிருக்கின்றது.

இயலுமாயின், சாவகாசமாகவும் விரிவாகவும் விடையெழுதும்படி என்னைக்கேட்டிருக்கின்றீர். எனக்குச் சாவகாசம் என்பது இல்லை, ஆகையால் விரிவாக எழுதுவது என்பதும் இயலாத காரியம்.

இப்படிக்கு
M. K. காந்தி.

மகாத்மா காந்தியின் கடிதம் இது மிகவும் சுருக்கமாகவே இருக்கின்றதாயினும், மேன்மக்கள் சொல்லரிய நெறியை யொரு சொல்லால் உணர்த்துவார். தருமசிந்தனையின் முதிர்ச்சியால் தெய்வசித்தத்தைக் காட்சிகொண்டு, எல்லா உயிருக்கும் உதவியாய் நிற்கின்ற முயற்சியே நெறியாக, அச்சித்தம் முழுவதும் கைகூடவேண்டும் என்னும் எண்ணமே தன் வாழ்க்கையை நடத்திவைக்கின்றது என்னும் இதனிலும் சிறந்ததொன்று வில்ரோன்டின் கேள்விக்குப் பதிலாகச் செப்பலரிது. கடவுட்காட்சியில் கருத்துவைத்து ஒரு கருமத்தை மேற்கொள்கின்றவர்களே பெரியவராவார். அக்காட்சி கலக்கமற்றதோ, அல்லது இச்செய்கை பயனுடையதோ என்று ஆராயப்புகுவது சிறியனவே சிந்திக்கும் தன்மைத்தாம். அது தெய்வத்திற்கும் அத் தெய்வபக்தருக்கும் இடையே தீர்த்துக்கொள்ளவேண்டிய தொன்று. மற்று, உண்மைப் பக்தர்களுக்குத் தலைவணங்கி நிற்கவேண்டியதே நம்மனோர் கடன்.

தமிழ்ப்பாடம் 140.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[617-வது பக்கத் தொடர்ச்சி]

பற்றிய காமத் தீயாற்
பைம்பொனாட் டமரர்க் கெல்லாங்
கொற்றவன் வருந்தா வண்ணங்
கொய்துகொய் தணையிற் சேர்த்தே
யுற்றவர் வறுமை தீர்க்கு
முயர்சினைத் தருக்க ளோந்து
நற்றளி ரின்மை யாகி
நல்குர வடைந்த மாதோ. 62.

உரை:—பை - பசுமையான, பொன்நாடு - பொன்னுலகத்தில் உள்ள, அமரர்க்கு எல்லாம் - எல்லாத் தேவர்களுக்கும், கொற்றவன் - தலைவனான இந்திரன், பற்றிய-பற்றிக்கொண்ட, காமம் தீயால்-காமமாகிய

நெருப்பினால், வருந்தா வண்ணம் - வருந்ாதபடி, கொய்து கொய்து - பறித்துப் பறித்து, அணையில் சேர்த்தே - அவன் படுக்கையில் பரப்பியதினாலேயே,

உற்றவர் - தன்னை யடைந்தவர்களது, வறுமை - தரித்திரத்தை, தீர்க்கும் - நீக்குகின்ற, உயர் - உயர்ந்த, சினை - கிளைகளையுடைய, தருக்கள் ஐந்தும் - ஐந்து தருக்களும், நல் தளிர் இன்மை யாகி - நல்லதளிர்கள் இல்லாதவைகள் ஆகி, நல்குரவு அடைந்த - தரித்திர மடைந்துவிட்டன (மாதோ - அசை)—என்று நளன் தமயந்திக்குக் கூறினான்.

விரிவுரை:—தமயந்தியின் பொருட்டு இந்திரன் அடைந்துள்ள காமவெப்பம் தணியும்வண்ணம் அவனுக்குச் சீதளோபசாரங்கள் செய்பவர், ஐந்து தருக்களின் தளிர்கள் முழுவதையும் பறித்துப் பறித்து அவனுடைய படுக்கையில்சேர்ப்பதால், மற்றவர் வறுமையைத் தீர்க்கின்ற அத் தருக்கள் இலையும்தளிரும் இல்லாத தரித்திரத்தை இப்பொழுது தாமே எய்தி விட்டன, என்பது இச்செய்யுளின் பொருள். "உன்னைத் தேவர்கள் அதிகங் காதலிப்பதால் நீ அவர்களை மணத்தல் வேண்டும்" எனத் தமயந்தியை நளன் வற்புறுத்தியவாறு இது.

குறிப்பு:—பற்றிய + காமம் = பற்றியகாமம்:—நிலைமொழி பெயரெச்சமாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. (   )

காமம் + தீயால் = காமத்தீயால்:-காமமாகிய தீயால் எனவிரியுமித்தொடர் பண்புத்தொகையாகையால் நிலைமொழியீற்று மகரமெய் கெட்டது. (   ) பின், வருமொழிமுதலில்வந்துள்ள வல்லினமெய் மிகுந்தது. (   )

தீ + ஆல் = தீயால்:—ஆல் என்னும் மூன்றும் வேற்றுமை உருபு, அதன்முன் இருக்கின்ற ஈகார உயிருடன் புணரும்போது, யகர உடன்படுமெய்பெற்றது. (   )

தீயால் + பை = தீயாற்பை:—இன்னும் இதற்கு விதி கூறவில்லை.

பசுமை + பொன் = பைம்பொன்:— இன்னும் விதி கூறவில்லை.

பொன் + நாடு = பொனாடு:— இன்னும் இதற்கு விதி கூறவில்லை.

நாடு + அமரர்க்கு = நாட்டு + அமரர்க்கு = நாட்டமரர்க்கு:—நிலைமொழியீறு குற்றியலுகரம் ஆதலால், வருமொழி முதலில் உயிர்வர, அக்குற்றியலுகரம் கெட்டு நின்ற மெய்யின்மேல் அவ்வுயிர் ஏறிப் புணர்ந்தது(   ). மேலும் அந் நிலைமொழி டகர மெய்யின்மேல் ஏறிய நெடிற்றொடர்க் குற்றியலுகரமாக இருப்பதால் நாட்டு என அந்தக்குற்றியலுகரம் ஏறியிருந்த டகரமெய் விரிந்தது. (   )

அமரர்க்கு + எல்லாம் = அமரர்க் கெல்லாம்:—நிலைமொழியீற்றுக் குற்றியலுகரங்கெட்டு நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறிப் புணர்ந்தது. (   )

எல்லாம் + கொற்றவன் = எல்லாங்கொற்றவன்:-வருமொழி முதலில் வல்லினமெய் வர, நிலைமொழியீற்று மகரமெய் அதற்கு இனமான ஙகர மெய்யாய்த் திரிந்தது.

கொற்றவன் + வருந்தா = கொற்றவன் வருந்தா:— யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணர்ந்தது. இதற்கு விதி இன்னுங் கூறவில்லை.

வருந்தா + வண்ணம் = வருந்தாவண்ணம்:-நிலைமொழியிறுதியில் உயிரும் வருமொழிமுதலில் இடையினமெய்யும்நிற்க அவை இயல்பாய்ப் புணர்ந்தன. (   )

வண்ணம் + கொய்து = வண்ணங் கொய்து:—நிலைமொழி யீற்று மகரமெய் வருமொழிமுதல் வல்லின மெய்க்கு இனமாய்த் திரிந்தது. (   )

கொய்து + கொய்து = கொய்துகொய்து:-நிலைமொழி குற்றியலுகரவீற்று வினையெச்ச மாயினும், அது இடைத்தொடர்க் குற்றியலுகரம் ஆதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. (   )

கொய்து + அணையில் = கொய்தணையில்:-வருமொழி முதலில் உயிர் வர, நிலைமொழியீற்றுக் குற்றியலுகரங் கெட்டது. கெட்டுநின்ற மெய்யின்மேல்அவ்வுயிர் ஏறியது. (   ).

அணை + இல் = அணையில்:—அணையென்பது ஐகாரத்தை ஈற்றிலுடைய தாதலால், அதனோடு இல் என்னும் ஏழாம்வேற்றுமை உருபு சேர்கின்றபோது, யகர உடன்படுமெய் வந்தது. (   ).

அணையில் + சேர்த்தே = அணையிற் சேர்த்தே:—நிலைமொழியீற்று லகரமெய், வருமொழி முதலில் வல்லினம் வர, றகரமாய்த் திரிந்தது—விதி இன்னுங் கூறவில்லை.

சேர்த்தே + உற்றவர் = சேர்த்தே யுற்றவர் :—ஏகார இடைச்சொல்லிற்குப்பின் உயிர்வர யகர உடன்படுமெய் வந்தது. (   ),

உற்றவர் + வறுமை:—நிலைமொழியீற்றில் ரகரமெய் இருப்பினும், வருமொழி முதலில் இடையினமெய் வந்திருப்பதால் அவை இயல்பாய்ப் புணர்ந்தன. (   )

வறுமை + தீர்க்கும் = வறுமைதீர்க்கும்: இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

தீர்க்கும் + உயர் = தீர்க்குமுயர்:—நிலைமொழியீற்று மெய்யோடு வருமொழிமுதல் உயிர்சேர்ந்து உயிர்மெய் ஆயிற்று. (   )

உயர் + சினை = உயர்சினை :—இது வினைத்தொகையாகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. (   )

சினை + தருக்கள் = சினைத்தருக்கள் (சினைகளை உடைய தருக்கள்):-இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது. (   )

தருக்கள் + ஐந்தும் = தருக்களைந்தும் :—நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (   )

ஐந்தும் + நற்றளிர் = ஐந்துநற்றளிர் :—வருமொழி முதலில் மெல்லினமெய் வர, நிலைமொழியீற்று மகரமெய் கெட்டது. (   )

நன்மை + தளிர் = நல் + தளிர் = நற்றளிர்:—இதற்கு இன்னும் விதி கூறவில்லை.

தளிர் + இன்மை = தளிரின்மை:-வருமொழி முதல் உயிர், நிலைமொழியீற்று மெய்யின்மேல் ஏறியது. (   )

இன்மை + ஆகி = இன்மையாகி:—நிலைமொழியீற்று ஐகார உயிரோடு வருமொழிமுதல் உயிர், யகர உடன்படுமெய் பெற்றுப் புணர்ந்தது. (   )

ஆகி + நல்குரவு = ஆகிநல்குரவு :—வருமொழிமுதல்

மெல்லினமெய் நிலைமொழியீற்று உயிரோடு இயல்பாய்ப் புணர்ந்தது. (   )

நல்குரவு + அடைந்த = நல்குரவடைந்த:-நிலைமொழியின்ஈற்றிலிருப்பது முற்றியலுகரமானாலும், அது வகரமெய்யின்மேல் ஏறியிருப்பதால், வருமொழி முதலில் உயிர் வர, அம் முற்றியலுகரம் குற்றியலுகரத்தைப்போல் கெட்டு, அது நின்ற மெய்யின் மேல் வருமொழிமுதல் உயிர் ஏறலாயிற்று. (   )

அடைந்த + மாதோ = அடைந்தமாதோ:- வருமொழிமுதல் மெல்லினமெய். நிலைமொழியீற்று உயிரோடு இயல்பாய்ப் புணர்ந்தது. (   )

கடிமலர்க் கூந்த னின்மேற்
காதன்மீ தூர நின்ற
வடுதொழிற் கூற்று மஞ்ச
வடர்கின்றா னனங்கன் வெய்ய
வடவையோ டிகலு முந்நீர்க்
கிறையையும் வருத்தி யாவுஞ்
சுடுதழற் கடவுண் மீதுஞ்
சுட்டது காமத் தீயே. 63

உரை:— கடி - வாசனை பொருந்திய, மலர் - மலர்களை அணிந்த, கூந்தல்-கூந்தலையுடைய தமயந்தியே, நின்மேல் - உன்மீது, காதல் - ஆசை, மீதூரநின்ற - அதிகரித்து நிற்கின்ற, அடு தொழில் - கொல்வதே தொழிலாக உள்ள, கூற்றும் - யமனும், அஞ்ச - நடுங்கும்படி, அனங்கன் - மன்மதன், அடர்கின்றான் - அவனை நெருங்குகின்றான். காமத் தீ - காமாக்கினியானது, வெய்ய - வெப்பமுடைய, வடவையோடு - வடவைத்தீயுடன், இகலும் - மாறுகொண்ட, முந்நீர்க்கு - கடலுக்கு, இறையையும் - தலைவனாகிய வருணனையும், வருத்தி - துன்பப்படுத்தி, யாவும் - எல்லாவற்றையும், சுடு - சுடுகின்ற, தழல் கடவுள் மீதும்- அக்கினிதேவன்மேலும், சுட்டது- சுட்டுவிட்டது. (என்று நளன் கூறினான்).

விரிவுரை:—காமமிகுதியினால் இந்திரன் படுகின்ற அவத்தையை முன்செய்யுளில் கூறிய நளன், இந்தச் செய்யுளில், யமன் வருணன் அக்கினி ஆகிய மூன்று தேவர்களும் படுகின்ற அவத்தையையுங் காட்டுகின்றான். "எல்லாரையுங் கொல்லுகின்ற யமனோ, இப்பொழுது, உருவமில்லா மன்மதன் அருகு நெருங்கினாலே பயப்படும்படியாக முடிந்தது. வடவாமுகாக்கினியை எதிர்த்துத் தாக்குகின்ற கடலின் கடவுள் இப்பொழுது காமக்கனலைத்தாங்கமுடியவில்லை. எல்லாவற்றையுஞ் சுட்டெரிக்கவல்ல அனற்கடவுளையே சுட்டதென்றால் இக்காமத்தீயின் வெப்பத்தை விளம்பக்கூடுமோ! ஆதலின் அன்னவர் தாபத்தைத் தணித்து நீ அருளல் வேண்டும்" என்ன நளன் தமயந்தியைத் தூண்டியவாறும் இது.

குறிப்பு:—மலர்க்கூந்தல்—மலர்களை அணிந்த கூந்தலை உடையவள், என விரியுமாதலால் இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்கதொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. (   ) அது இங்கு விளித்தல் பொருளுடைய எட்டாம் வேற்றுமையை அடைந்திருக்கின்றது.

கூற்றும், என்பதிலுள்ள உம்மை, உயர்வுசிறப்போடு எதிரது தழுவிய எச்சப்பொருளும் உடையது, அவ்வாறே இறையையும் என்பதில் உள்ள உம்மை உயர்வுசிறப்போடு இறந்தது தழுவிய எச்சப்பொருளையும் உடையது (   )

அடுதொழில் :—வினைத்தொகை; வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. சுடுதழல், என்பதும் அவ்வாறே. (   )

சுட்டது காமத்தீ - வினைமுற்றுத்தொடராகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. (   )

முருக்கித ழணங்க னையநின்
முகிழ்முலை வேட்ட ஞான்றே
செருக்கிள ரனங்கன் வாளிச்
செழுமலர் வருத்த வாடி
இருத்தலாற் பழிச்சு கின்றோர்
ஏடவிழ் நறிய போதா
லருச்சனை புரியுந் தோறு
மஞ்சுவ ரமரர் மாதே. 64.

உரை:— முருக்கு - முருக்கமலரைப் போன்ற, இதழ் - உதடுகளையுடைய, அணங்கு அன்னாய் - தெய்வப்பெண்போன்ற தமயந்தியே — நின் - உன்னுடைய, முகிழ் - குவிந்த, முலை-முலைகளை, வேட்ட ஞான்றே - விரும்பின பொழுதே, செரு - போரை, கிளர் - மிகுதியாகச் செய்கின்ற, அனங்கன் - மன்மதன் எய்கின்ற, வாளி - பாணங்களாகிய, செழு - செழுமையான, மலர் - மலர்கள், வருத்த - வருத்த, அமரர் - தேவர்கள், வாடி இருத்தலால் - சோர்ந்து இருக்கின்றார்களாதலால், பழிச்சுகின்றோர் - அவர்களைப் பூஜிப்பவர், ஏடு - இதழ்கள், அவிழ்-மலர்ந்த, நறிய - வாசனையுடைய, போதால் - மலரினால், அருச்சனை புரியுந்தோறும் - அருச்சனைகள் செய்யும்போதெல்லாம், அஞ்சுவர்-(இதுவும் தம்மைவருத்தவருகின்ற மன்மதனது மலர்ப்பாணந்தானோ வென்று அத் தேவர்கள்) பயப்படுவார் (என்றான் நளன்). மாதோ - அசை.

விரிவுரை:— நளனது தூதுமொழி யனைத்தும் இளம் பரிகசத்தோடு சிறிது கலந்தே நிகழ்கின்றன. "உன்னைவிரும்பியதன்பயனாகத் தேவர்கள் அடைந்த கதியை என்னென் றுரைப்பேன் தமயந்தி. மன்மதனது மலர்ப்பாணம் பட்டுப்பட்டு வருந்தியிருக்கும் அவர், மருண்டவன் கண்ணிற் கிருண்டதெல்லாம் பேயென்ன, இவ்வுலகிலுள்ளவர் அருச்சனைசெய்து தூவும் பூக்களைக்கண்டும் அஞ்சி மிக நடுங்குபவராய் முடிந்திருக்கின்றனர். இத்தகைய ஓர் எளிமையை நீ காத்தல் வேண்டும்;" என இயம்புவது அத்தேவர்தம் காதற்பேதைமையையே பெரிதும் பகர்வதாகும்.

குறிப்பு:—செரு + கிளர் = செருக்கிளர்:—இது இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராயினும், நிலைமொழி இரண்டு குறில்களாலானசொல்லாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது (   ).

வாளி + செழுமலர் = வாளிச் செழுமலர்:—வாளியாகிய செழுமலர், என விரியும். இது பண்புத்தொகை; ஆகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது. (   )

இன்னணந் தேவர் மாழாந்
திருநில வரைப்பிற் போந்தன்

பொன்னவிர் திதலை யார்ந்த
புணர்முலைப் போகம் வேட்ப
முன்னமெத் தவஞ்செய் தாய்கொ
லியைவதே முறைமை யென்றான்
கன்னல்வி லொளித்து நின்ற
காமனே யனைய நீரான். 65

உரை:—கன்னல்வில் - கரும்புவில்லை, ஒளித்து - மறைத்து, நின்ற - அங்கு நின்ற, காமனே அனைய நீரான் - மன்மதனேபோன்ற தன்மையுடைய நளன் —"இன்னணம் - இப்படியெல்லாம், தேவர் - தேவர்கள், மாழாந்து - மயக்கமெய்தி, இரு - பெரிய, நிலவரைப்பில் - பூமியில், போந்து - வந்து, உன் - உன்னுடைய, பொன் - பொன்னைப்போல், அவிர் - பிரகாசிக்கின்ற, திதலைஆர்ந்த- தேமல் பொருந்திய, புணர்- நெருங்கிய, முலைப்போகம் - முலைகளினுடைய போகத்தை, வேட்ப - விரும்புவதற்கு, முன்னம் - முன் பிறப்பில், எத்தவம் செய்தாய்கொல் - நீ எவ்வளவு பெரிய தவத்தைச் செய்திருக்கின்றாயோ(ஆகையால்) இயைவதே - அவர்களை மணக்க நீ சம்மதிப்பதே, முறைமை - தகுதியாகும்,'' என்றான் - என்று கூறி முடித்தான்.

குறிப்பு:-இப்பாடத்தில் காட்டப் பெற்றிருக்கின்ற புணர்ச்சிகளுக்குரிய விதிகளை எவ்வெவ் விதழ்களில் வரைந்துளோம் என்பதை வாசகர்களே தேடியறிந்து குறித்துக்கொள்வது நல்லதோர் பயிற்சியாகும் என எண்ணி இடம் விட்டிருக்கின்றோம்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[614-வது பக்கத் தொடர்ச்சி]

வாழி வாழி வாலி வாழி

அறிந்தபின் கடவுளை நம்புவோமென்பதெல்லாம் வம்பே; நம்பிய பின்னரே கடவுளை அறியலாம். ஆய்ந்தறியப் புகுவோர் காணாத காட்சிகடவுள். இவ்வாராய்ச்சியுடைய நெஞ்சையே பொய்வளரும் நெஞ்சு என்பர் தாயுமானவரனைய மேலோர். நம்பினோருக்கே கடவுள் தன்னைக் காட்டிக்கொடுக்கின்றார்.

தயரதன் புதல்வனும் இராமனைத் தருமத்தின் உருவமே என மதித்திருந்தனன் வாலி. அன்னதோர் இராமன் தன்பால் அடாது செய்தானாயினும், இராமனே செய்த செய்கையாதலால் ஒருகால் அது தக்கதேயோ என அயிர்த்து "என்னீ இதனைச்செய்தனை" என்று வாலி வினவ, அதற்கு அவனும் அவன்தம்பியும் கூறியகாரணங்கள் பொருந்தாமையால், அடாத காரியமே அது என்னும் முடிவு இன்றியமையாததாயிற்று. சார்பறவாதத்தை இராமன் மேற்கொண்டானல்லன்; முதலறத்திற்கும் அது ஒவ்விற்றில்லை. வாயார இராமனை வாலி ஏசத் துவக்கவேண்டிய வேளை இதுவே. ஆனாலோ, வையப்புகாமல், "அறத்திறன் அழியச் செய்யான் புவியிடை அண்ணல்'' என்பதையே மீண்டும் எண்ணலாயினான். "செய்கையோ அடாததாய் நிற்கின்றது, செய்தவனோ அன்னது செய்யற்குரியானல்லன்—என்னிது! கடவுளின் செய்கையேயன்றோ மானுடவிதிகளுக்கு அடங்காக்காலத்திலும் அறத்திறன் அழியாததாகவிருக்கக்கூடும். எனின், என்மேல் அம்பொன்று எய்து நிற்பவன் அக்கடவுளே ஆதலுங்கூடும்'' என்ன வாலியின் மனத்தின்கண் ஓர் அரிய நம்பிக்கை பிறக்கின்றது. ஈசுவரனுடைய செய்கைக்கு இலக்கானவர்களுக்கெல்லாம், அவ்வாறு இலக்காகி வருந்துகின்றவர்களைக் காண்பவர்களுக்கு எல்லாம், செய்கையின் அநீதி தோன்றியவுடன் அச்செய்கைதான் ஈசுவரன் சித்தமே என்ற நம்பிக்கை, வாலிக்குப்பிறந்ததுபோல், பிறந்துவிடும் என்று எண்ணற்கில்லை. உலகத்தின்கண் துன்பத்தையும் அநீதியையுங் காண்கின்ற சில சிந்தனையாளர் அதுபற்றிக் கடவுளை மறுக்கவும், தாம் மறுத்து இல்லையென்று ஒழித்துவிட்ட அக்கடவுளைப் பிறகு நிந்திக்கவும்புகுகின்றனரேயன்றி, துன்பமும் அநீதியும், அன்னோர்பால் கடவுள் நம்பிக்கைக்குக் காரணமேனும் ஆதாரமேனும் ஆவதையோ எங்கும் காண்கிலோம். ஏனெனில் அவர்தாம் வாலியின் தன்மை வாய்ந்தவர்கள் அல்லரே. தானே பாற்கடல் கடைந்தெடுத்த அமுதத்தில் ஒருதுளி தானருந்தாமல் அனைத்தையும் அமரர்க்களித்துவந்த வள்ளலன்றோ வாலி! மங்கையோர் பங்குடையபரமனை அனவரதம் ஆராதிக்கும் விரதத்தினன். இன்னவாறு பண்பட்ட வுள்ளமே, அநீதியும் துன்பமும் நிகழக் காணுமளவில், ஒருநாள் அல்லாக்கால் ஒரு நாள், கடவுளின்சித்தமே அவையென நம்புதற்கு உரியதாயமையக்கூடும்.

வாலி, ஆதலின் நம்பலுற்றான். உற்ற அந் நம்பிக்கைக் குறுதியளிக்க வல்லதாய் முன்னே இவன்கேட்டிருந்த அக்கேள்விச்செல்வம் இப்பொழுது இவனுக்கு வந்து உதவியது. தாயுமானவர் அனையோர் புலம்பும்வண்ணம் ஒருவன் கற்றதும் கேட்டதும் முற்றிலும் அவலமாய்த் தீர்ந்துவிடாது. பக்குவமடைகிற காலத்தில் அது பக்கத்தே வந்துநின்று பரம உபகாரம் செய்யும். முன்னே குறித்தபடி வாலிக்கு நம்பிக்கை பிறந்தது, அவனது கேள்வி அதனை உறுதிசெய்தது, சென்னியை இறைஞ்சிவிட்டான். இறைஞ்சி நிமிர்வோன்கண்களுக்கு எம்பெருமான் தயரதன்மைந்தன்என்னுமோர் மன்னனும் அவ்வேடத்தைக் களைந்துவிட்டுத் தானேயாய்நின்று காட்சிகொடுக்கின்றார். வேறென்ன செய்யவல்லவர், பாவம், இக்கடவுளர்! தனது கடவுட்செய்கையை, மனிதவேடத்தில் சாதிக்கவேண்டுமென்று வீணே முயன்றபோதெல்லாந் தோற்றுத் தோற்று இறுதியில், "சும்மா இருக்கின்றாயா, அல்லது, என் சொரூபத்தைக் காட்டி விடட்டுமா'' என்றுதான் அக்கடவுள் விவகரிக்கவேண்டிநேர்கின்றது. வறுமையால்வாடிய அந்தணன் தருமியென்பான், பாண்டியன் தூக்கிய பொற்கிழியைப் பெறுமாறு, அவனுக்கோர் பாடல் பாடித் தந்தார் சோமசுந்தரக் கடவுள். அரசவைக்கண் அதனை அத்தருமி வந்து உரைத்தபோது, நக்கீரன் "இப்பாட்டுக் குற்றமுடைத்து'' என்னவே, அவ்வேதியன் கடவுள்பால்

ஓடிச் சென்று, "பரம, குற்றமுடைய பாட்டையோ எனக்குக் கூறித்தந்தாய் ஒரு நீ" என்று,

வறுமைநோய் பிணிப்பப் பன்னாள்
வழிபடு மடியே னின்பாற்
பெறுபொரு ளிழந்தே னென்று
பேசிலேன் யார்க்கு மேலாங்
கறைகெழு மிடற்றோய் நின்றன்
கவிக்குற்றஞ் சில்வாழ் நாட்சிற்
றறிவுடைப் புலவர் சொன்ன
லாருனை மதிக்க வல்லார்

[வறுமைநோயானது வருத்தஞ்செய்ய அதனை ஒழிக்கும் பொருட்டுப் பலகாலம் குறையிரந்து வழிபட்ட அடியேன், உன்னிடத்து அடையநின்ற பொருளை அடைய வில்லையே என்று நான் குறைகூறுகின்றேன் அல்லேன். ஆனால் எல்லாருக்கும் மேலான, விடந்தங்கிய கழுத்தையுடையவனே, உன்பாட்டிற்குக் குற்றத்தை, சிறுஆயுளையும் சிறு அறிவடையும்உடைய புலவர் சொன்னால் அப்புறம்,யாரே உன்னை மதிப்பார்.]

என்று முறையிடுதலும், அப்பரமனே ஓர் புலவனாகி அவைக்கள்மெய்தித் தன்கவிக்குக் குற்றங்கூறியவன் யாவனெனக் கேட்டுநின்றநாள், நக்கீரன் தானேதானெனத் தருக்கி மீண்டுமக் குற்றத்தையே வற்புறுத்தச் சிவபிரான் தான் பாடிய பாட்டினை இனிக் காத்தற்கு வேறுவகை காணாகி,

கற்றைவார் சடையா னெற்றிக்
கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவா னின்னு மஞ்சா
னும்பரார் பதிபோ லாக
முற்றுநீர் கண்ணா னாலு
மொழிந்தநும் பாடல் குற்றங்
குற்றமே யென்றான் றன்பா
லாகிய குற்றந் தேரான்

[அந்த அடர்ந்த நீண்ட சடையையுடைய சிவபிரான் தன் நெற்றிக்கண்ணைச் சிறிது திறந்துகாட்ட, அத் தீக்கு இலக்காகியிருந்த நக்கீரன் இன்னும் அஞ்சாமல், "தேவேந்திரன் போல உடம்பு முழுவதும் நீர் கண்கள் ஆனாலும், நீர் பாடிய அப்பாடல் குற்றம் குற்றமே" என்று, தன்னுடைய குற்றத்தைச் சிறிதும் உணராத நக்கீரன் கூறினான்]

என்னப் பரஞ்சோதி முனிவர், சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களில் ஒன்றினை நிகழ்த்துவார். நக்கீரனது தருக்குக் கிடக்க, சிவபிரான் தன் சொற்றொழிலைச் சாதிப்பதற்குஇறுதியில் தனது சுயரூபத்தைக் காட்டவேண்டி முடிந்தது போன்றே, இங்குத் திருமால் தனது விற்றொழிலைச் சாதிப்பதற்கு வாலியின்முன் தன்னுடைய சுயரூபத்தைக் காட்டவே வேண்டி நேர்ந்தது. இவ் விருபெரும் தேவர்களும் ஒருவரே என்பது, இவ்வகையிலும், தக்கதாயது.

அதன்பின்னும் நக்கீரன் குற்றமே கண்டானென்றால்—அவன் வேறு, வாலி வேறு. வாலியைப்போல் வண்மையால் உயர்ந்த உள்ளத்தா னல்லன் அவன். வாலியைப்போல் பூசனைகள் புரிந்து கனிந்த உள்ளத்தானுமல்லன். ஆதலாற்றான் அவன் கற்ற கல்வியெல்லாம் அவலமாய்ப்போக, வாலி கேட்டிருந்த கேள்வி இவனுக்கு உறுதுணையாய் வந்து உதவியது. உதவுதலும்,

தாயென வுயிர்க்கு நல்கித் தருமமுந் தகவுஞ் சால்பு
நீயென நின்ற நம்பி நெறியினி னோக்கு நேர்மை
நாயென நின்ற வெம்பா னவையற வுணர லாமே
தீயன பொறுத்தி யென்றான் சிறியன சிந்தியாதான்

[தாய்போல உயிர்களிடத்தில் அன்புவைத்து,தருமமும் நீதியும் நிறைவும் நீயேயாக நிற்கின்ற புருஷோத்தமனே, எமக்குரிய நெறியின்படி பார்க்குங்கால், நான்செய்தவை, நாய்போன்று தாழ்ந்த எங்களிடத்தில் எங்கள் ஒழுக்கத்தின்படி நேர்மைபிறழ்ந்த குற்றம் யாதுமற்றதாய் இருப்பதை உணர்ந்துகொள்ளலாமே. ஆயினும், நான் பேசிய தீய சொற்களைப் பொறுத்துக்கொள்வாய்—என்று அற்ப புத்தியில்லாதவனாகிய வாலி கூறினான்.

சிவபிரான் நெற்றிக்கண்ணைக் காட்டியபின்னரும் நக்கீரன், அக்கடவுள் செய்த பாடல் குற்றம் குற்றமே என்றனன். திருமால் தன் வடிவத்தைக் காட்டிய பின்னும் வாலி, தான்செய்த செய்கை ஒருபோதும் குற்றமாகாதென்றே மீண்டும் வற்புறுத்துகின்றனன். மேனோக்கிற்கு, இவ்விருவரும் ஒருபடித்தாகவே ஒழுகுகின்றார் போலத் தோன்றினும், ஊன்றி நோக்குங்கால் இவை இரண்டும் தம்மிடையே உள்ள வேற்றுமையால் எதிரெதிர் நெடுந்தூரம் விலகுவது தெரியவரும். தமக்கு உரிய நெறியின்படி நோக்குமிடத்து நேர்மைபிழைத்த நவையற்று நிற்கின்ற தன் நிலையை வற்புறுத்துகின்றானே யல்லாமல், வாலி, அன்ன தன்னைக் கொன்றவன் செய்தகொலை குற்றமே என்னக் கூறுகின்றானல்லன் என்பதை மறத்தலாகாது. "குற்றமற்ற வுன்னை நான் குற்றங்கூறிய தீயசொற்களைப் பொறுத்தருள்" என்கின்றனன். குற்றமற்ற வொருவனைக் கொன்றும் குற்றமற நிற்கவல்லவன் கடவுள் ஒருவனே (அதற்குக் காரணமும் வாலி பின்னர்க் கூறியுளன்). இராமனைக் கடவுளேயென்று கண்டாலன்றி வாலியின் வாயில் இவ்வாசகம் வந்திருத்தல் அரிது. இராமனைக் கடவுள்என வுணர்ந்த வாலிஅவ்வாறு காணவுங் காண்கின்றான். அந்தக்காட்சியின் அதிர்ச்சியால்அவனுள்ளம் இறையளவு குழம்புகின்றது. ஆயினும், "கடவுளோ நம்மைப் படைத்தானல்லன், நாமே கடவுளைப் படைத்தவர்' எனக் கழறும் சில மக்களைப்போன்று வாலியும், "இக்காட்சி என் சித்தப்பிரமையின் கற்பனையேயோ" என்ன மயங்கியதில்லை என்பதை வற்புறுத்தவே கம்பர் அவனை இங்குச் "சிறியன சிந்தியாதான்" எனச் சிறப்புற உரைக்கின்றார் போலும். வாலியின் காட்சி வளர்கின்றது.

இரந்தனன் பின்னு மெந்தை
யாவது மெண்ணா றேற்றாக்
குரங்கெனக் கருதி நாயேன்
கூறிய மனத்துக் கொள்ளேல்
அரந்தைவெம் பிறவி யென்னோய்க்
கருமருந் தனைய வையா
வரந்தரு வள்ளா லொன்று
கேளென மறுத்துஞ் சொல்வான்.

[என் தந்தையே, யாதொன்றும் அறியமாட்டாத் குரங்கென்பதைக் கருதி, நாயனைய நான் உன்னைக் கூறியவை

களை மனத்திற்கொள்ளாதே" என்று பின்னும்பிரார்த்தித்து, "துன்பத்திற்கு இடமாகிய கொடியபிறப்பாகிய நோய்க்கு அருமையான மருந்துபோன்ற ஐயனே, வேண்டியவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தருளும் வள்ளலே, நான் ஒன்று சொல்வதைக் கேள்" என்று மீளவுங் கூறலானான்.]

முன்னே 'தீயன பொறுத்தி' என்று வேண்டியதை இங்கு விளக்குவான்போல் "நாயேன் கூறிய (செய்தன அல்ல) மனத்துட் கொள்ளேல்" என்பதும் வாலி தன் செய்கை குற்றமுளதென ஒவ்வாமை வெளிப்படுத்தும். அன்றியும், வாலி யோர் வானரமாக மதிக்கத்தக்கவ னல்லன் என்று இராமன் மிக முயன்று வாதித்திருந்தும், கம்பரே அதனை ஒவ்வாதார்போல் 'கவிகுலத் தரசென்றே' அவனைக் குறிப்பதும், வாலியும் அவ்வாறே "நாயேன் குரங்கெனக் கருதி" என்று இங்கும், 'தொல்லைச் சிற்றினக் குரங்கினோடு' என்றும் "மதவியல் குரக்குச் செய்கை" என்றும் பின்னரும் பேசுவதும், இராமபிரானது வாதந்தான் யாதும் மதித்தற்குரிய தன்றென்பதைத் தெரிவிக்கின்றன. இன்னும் ஒன்று இவ்வயின் காணற்கு உளது. இந்தச் செய்யுள்முதல் பின் சுக்கிரீவனை இராகவன் கைகளில் ஒப்புவிக்கின்றபோது 'மன்னவற் கரசன் மைந்தா' என்று அழைக்கின்றவரையில், இராமனை வாலி ஓர் மனிதனுக்குஉரிய அடைமொழி யாதுமே கொடுத்துப் பேசாமையோடு, அவனைப்பற்றிக் கூறுவதும் அவனை அழைக்கின்ற வாசகங்களும் யாவும் பரம்பொருளுக்கே உரியவைகளாய் அமைந்திருக்குந் தன்மை, இராமபிரானை இப்பொழுது இவன் பரம்பொருளாகவே காண்கின்றான் என்று ஐயமறக் கூறுவதற்கு ஆதாரமாயிருக்கின்ற ஏனைய சான்றுகளுக்குச் சால வலிமை தரும். அந்தச் சான்றுகளை ஒவ்வொரு செய்யுளிலும் மலையிக்காகக் காணலாம். 'ஒன்று நீகேள்' என மீண்டுந் துவக்குகின்ற வாலி, வேறெதுவும் உரைக்காமல், தன்முன் நிற்போன் யாவனென்று அவனுக்கே அறிமுகம் செய்துவைக்க விரைந்தனன் என்ன,

ஏவுகூர் வாளியா லெய்துநா யடியனேன்
ஆவிபோம் வேலைவா யறிவுதந் துதவினாய்
மூவர்நீ முதல்வநீ முற்றுநீ மற்றுநீ
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ

[ஏவிய உன்கூரியஅம்பினால்அடித்து, நாய்க்குநிகரான அடியேன்உயிர்நீங்கும்தருணத்தில்தத்துவஅறிவை எனக்குக் கொடுத்து உதவினாய். பிராம்மா விஷ்ணு உருத்திரன் என்னும் மூன்றுமூர்த்திகளும் நீயே,அம்மூவருக்கும் ஆதியான முழுமுதற் பொருளும் நீயே, பாவமும்நீயே தருமமும்நீயே. பகையும்நீயே உறவும்நீயே.மற்றவையும் நீயே, யாவும் நீயே.]

என்று வாலி விளம்புகின்றனன். பரம்பொருளைத் துதிக்கும் வாசகம் இது ஆகுமே யொழிய எத்துணையெத்துணை நீட்டியளப்பினும் ஒரு மண்ணினை ஆள்கின்ற மன்னன் மைந்தனைப் புகழ்கின்றபடியோ இது ஆதல் இயலாது. முன்னரும்,

ஒன்றாகி மூலத் துருவம் பலவாகி
உணர்வு முயிரும் பிறிதாகி யூழி
சென்று சறுங்கா லத்தந்நிலைய தாகித்
திறத்துலகந் தானாகிச் செஞ்செவே நின்ற
நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே நங்கள்
நவைதீர்க்கு நாயகமே நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி யயற்பேரைக் காய்தி
நிலையில்லாத் தீவினையு நீதந்த தன்றே

என்றுஇந்திரன், இராமபிரானைப் பரம்பொருளாகக் கண்டு பாடிய பாசுரத்தையே வாலியின்இவ்வாசகம் ஒத்திருக்கின்றது. இராமனுடைய பரத்துவத்தைக் கண்ட கவந்தன்,

ஆதிப் பிரமனுநீ யாதிப் பரமனுநீ
யோதி யுறுபொருளுக் கப்பாலுண் டாயினுநீ
சோதிச் சுடர்ப்பிழம்பு நீயென்று சொல்லுகின்ற
வேத முறைசெய்தால் வெள்காரோ வேறுள்ளார்.

என்றுபாடியிருப்பதும் வாலிபாடிய பாட்டின்முறையையே ஒக்கும்.

இப்படி இராமனை யாரென்று அவ் விராமனுக்கே அறிமுகம்செய்துவைத்த வாலி பின்,

புரமெலா மெரிசெய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெலா முருவியென் வசையிலா வலிமைசால்
உரமெலா முருவியென் னுயிரெலா நுகருநின்
சரமலாற் பிறிதுவே றுளதரோ தருமமே.

[திரிபுரங்களை எரித்த சிவபிரான் முதலியவர் எனக்குக் கொடுத்திருந்த ஒப்பற்ற வரங்களையெல்லாம்கடந்து என் பழுதற்ற வலிமைவாய்ந்த மார்புமுழுதையும் உருவி என் உயிரை அடியோடு குடித்துவிட்ட உன்அம்பே அல்லாமல் தனியே தருமம் என்பது வேறொன்று உளதோ.]

என்று இராமபிரானது செய்கையும் இவ்வகைத்து என்று மீண்டு மவனுக்கே தெரியச்செப்புகின்றனன். முன்னர், "நின் செய்கை கண்டு நினைந்தனவோ நீண் மறைகள், உன் செய்கை அன்னவைதான் சொன்னவொழுக்கினவோ" என்று கவந்தன் இராமபிரானைக் கேட்ட அக்கேள்விக்கு வாலி "நின் சரமலாற் பிறிது வேறு உளதரோ தருமமே" என்றிங்குஅரிதின்விடையளிக்கின்றான். மனிதர் தருமத்தைச் செய்யவேண்டும்; கடவுளோ, எதனைச்செய்கின்றானோ அதுதான் அவனுக்குத் தருமம். வலிமையே செம்மை Might is right என்னுங் கருத்து, வலிமைக்கோர் எல்லையுடைய மனிதர்பால் பொல்லாத கொள்கையேயாய் நிகழ்கின்றதாயினும், எல்லையின்றி எல்லாம்வல்லகடவுளின் திறத்தில், அதுவே முதலறமுங் கடந்தவோர் கடவுட் பேரறமென்ன நிற்கின்றது. வாலி வானரமாதலால் மனுநெறிவந்த வொழுக்கம் அவனுக்குஇல்லை, ஆதலின் அவன் அறம் பிழைத்தான் அல்லன்; அன்னவனைக் கொன்ற இராமன் கடவுளாதலால், இவனுக்கும்மறைநெறிதந்த ஒழுக்கமில்லை, ஆதலின் இவனும்அறம்பிழைத்தானல்லன்.ஈசுவரன் எது செய்கின்றானோ அது நீதி. அது நீதி என்பதற்கு அவன் அது செய்தான் என்பதே காரண மாவதன்றிவேறு காரணந் தேடவேண்டா. மனிதர் அறிந்துள்ள முதலறப்படி கடவுளின் செய்கைகள் நீதியல்லாதனவாகக் காணப்படுதலால் இப் பேதைமனிதர் கடவுளை மறுக்கவும் வெறுக்கவும் புகுகின்றனர். வரமெலாம் உருவித்தன்உரமெலாமுருவித் தன் உயிரெலாம்நுக

ர்ந்த அந்தச்சரம் அது தருமம்என்பதற்குத் தானே தனக்குச் சான்றாகி நிற்கின்றது. இராகவன் அன்று வாலியின்மீது மறைந்துநின்று எய்ததால் அன்றோ, இன்றுஇவ்வுலகங்கள் அம்மெய்ம்மையை உணர்ந்து உய்யவல்லவோர்செவ்வியைப்பெற்றது! இவ்வகைவாலியை வதைத்தானேனும், இது "காசில் கொற்றத்து இராகவன்" கதையே.

இராமனது வாளியின் வேகத்தைக்கொண்டு,அன்னதுஎய்யவல்லவன் கடவுளே ஆதல்வேண்டுமென்று வாலி ஊகித்தானோ என்று ஐயுற லாகாது. இராமபிரானைப்பரம்பொருள்என்றுகண்டு, அவன்பரம்பொருளாதலால் அவன் எய்த சரமே தருமம்என்பதைத் தேர்கின்றான்.

மாவலச் சூலியார் வாழ்த்துநர்க் குயர்வரம்
ஓவலற் றுதவனின் னொருதனிப் பெயரியம்
பாவலிப் புடைமையா லாகுமப் பொருளையாந்
தேவநிற் கண்டவெற் கரிதெனோ தேரினே

[தேவனே, மிக்கவலிமைவாய்ந்த சூலாயுதத்தையுடைய சிவபிரான் தன்னைத் துதிப்பவர்களுக்குச் சிறந்த வரங்களைக் குறைவில்லாமல் கொடுப்பது, உனது ஒப்பற்ற திருநாமம் ஒன்றைக் கூறும் அன்புடைமையினால் ஆகும், என்றால், அந்தப் பெயரிற்குஉரியபொருளே யாகின்ற உன்னை நேராகக் கண்ட எனக்குப் பெறுதற்கரிய பொருள் இனி யோசிக்குமிடத்து யாதிருக்கின்றது.]

என்ற வாலி பின்னரும் இராமபிரானது பரத்துவத்தையே கண்டு பேசலாயினான்.

யாவரு மெவையுமா யிருதுவும் பயனுமாய்ப்
பூவுநல் வெறியுமொத் தொருவரும் பொதுமையா
யாவனீ யாவதென் றறிவினா ரருளினார்
தாவரும் பதமெனக் கருமையோ தனிமையோய்

[எல்லாரும் எல்லாமும் ஆகியும், இருதுக்களும் அந்தருதுக்களின் பலனும் ஆகியும்,பூவும் அதன் நன்மணமும் போல விட்டுநீங்காமற் கலந்து அனைத்திற்கும் பொதுவாயுள்ளவனே, ஒப்பற்றவனே, நீ யாவன் என்பதும் உனது செய்கை எத்தகையதுஎன்பதும்என்னுடைய அறிவானது எனக்கு அறிவித்துத் தந்தது. இனி, அழிவில்லாத பரமபதம் எனக்குக் கிடைப்பது அருமையோ.]

உண்டெனுந் தருமமே யுருவமா யுடையநிற்
கண்டுகொண் டேனினிக் காணவென் கடவெனோ
பண்டொடின் றளவுமே யென்பரும் பழவினைத்
தண்டமே யடியனேற் குறுபதந் தருவதே

[இவ்வுலகில் யாங்கள் அறிந்துள்ள தருமங்களை எல்லாங்கடந்து அதற்கப்பாலும் ஒருதருமமும் உளது என்று சொல்லப்படும் அந்தத் தருமத்தையே உருவமாகஉடைய உன்னை நான் கண்டுகொண்டேன்; இனி நான் என்ன காணவேண்டிக் கிடக்கின்றது! முன்னே தொடங்கி இன்றளவும்நான் செய்திருக்கின்ற பழைய வினைகளின் தண்டனையே எனக்கு நல்ல பதவியைத் தருவதாகும்]

எனவெளிப்படையாகத் தான் 'கண்டுகொண்ட அச்செய்தியைக் கூறிவிட்டான். இவன் இங்ஙனம் காணுமாறு இராமன் காட்சி கொடுத்தனன் என்பதில் ஐயமில்லை. சக்கிரந்தாங்கிய திருக்கைகளோடும் வாலி இராமனைக் காணப்பெற்றான் என்பது, பின், "ஆழியைய" என்றழைப்பதினின்றுந்தெரிகின்றது.வாலிக்குக் காட்சிதந்து செல்கின்ற இராகவனைக் கம்பரும், "ஆலிலைப்பள்ளியான்" என்றே குறித்துக் கூறுவார்.

இந்தச்சரித்திரம் நிகழ்ந்தவண்ணம்இது. முதலில், "வேறு நின்று எவ்விடத் துணிந்து அமைந்தனென், என் கருத்து இது" என்று புறப்பட்ட இராமனுக்கு, அச்செய்கை தருமமாவது,'தன்கருத்து அது' என்னுந் தத்துவத்தினாலன்றி வேறுவகை யின்மையால், அத்தகையதோர் சித்தம் வைக்கவல்ல தான் யாவன் என்பதை வாலிக்குத் தெரியப்படுத்திநிற்கவேண்டிய தின்றியமையாததாயிற்று. ஆதலின், வாலியும், உலகத்திற் கியலாத தருமம் வேறொன்று உண்டு என்று முன் கேட்டிருக்கின்றவொரு கேள்விச்செல்வத்தின் பயனாய் இப்பொழுது கடவுளை அந்தவோர் தருமத்தின் உருவத்தில் கண்டுகொண்டான். இராகவனால் வாலி வதையுண்டதும் நல்லதாயிற்று.வதைத்தஅவ்விராமன், தன் சித்தம் என்பதொன்றையே ஈசுவர தத்துவமாகக்கூறாமல் மானுடதருமமுறைப்படி தன் செய்கையைக் காக்கமுயன்ற வாதத்தில் தோற்றதும் நன்றாயிற்று. வாலியைப் படுகொலை புரிந்தும் தான் "காசில் கொற்றத்துஇராமபிரானே"ஆகவல்ல நுண்மையைஇங்ஙனம்காட்டியிருத்தலில் அன்றோ,இன்றிவ்வுலகங்களிலிருக்கும் உயிர்கள், தத்தம் மருமத்தின்மீது, இராகவன் வாளி ஊன்றாமலே, உய்ய வல்லனவா யிருக்கின்றன. கடல்கடைந்து வானவர்க்கு அமுதங்கொடுத்தஅவ்வானரவள்ளல் இப்பொழுது தன் மார்பினைக் கடைந்து அமுதினும் அரியவோர் தத்துவப் பிழம்பை எடுத்து எம்மனோர்க்கு அளித்துச் செல்லலாகின்றான். வாலியைப் படுத்தானல்லன் இராமபிரான், மன்னற வேலியைப் படுக்குமாற்றால், மாபெரும் முழுமுதற்கடவுளை ஒரு சிறு மானுடப் போலியாய் மதித்துழலும் இழுதைச் செய்தியையே கிழித்தெறிந்தனன். இதனை உணர்ந்தக்கால் உய்யாரோ ஒருசிலர். மறைந் தொரு வாளியை அழுத்திய இராகவன் வாழி, அந்தச் சரமலால் தருமம் பிறிதில்லை என்பதுணர்ந்தவாலி வாழி, இவ்விருவரையும் உள்ளி நமக்கு உள்ளபடி உவந்தளித்த அவ்வள்ளியோன் கம்பநாட்டாழ்வாரும் வாழி.

கடவுட்சித்தம் மானுட நீதியால் அளப்பதற்கரிது என்னுமத் தத்துவத்தைக் கம்பர்இங்குச் சாதித்தது போன்றே, கடவுள் நீதி மானுட சித்தத்தைக் கடந்து நிற்கும் பான்மையை, "முனிவர் பன்னியர்தம் நிறையன்று அளந்துகாட்டுகென்" எனப்புறப்பட்டுத்தாருகவன இருடிபத்தினியர் கை வளைகளைச் சிவபிரான் கவர்ந்து சென்ற திருவிளையாடலில் இனிது உய்த்துணரவைத்திருக்கின்ற பரஞ்சோதிமுனிவரும் உடன் வாழ்க. *

* இவ்விடயம், 2-வது வால்யூம் 854-வது பக்கத்தில் ஆராயப்பெற்றிருப்பதால் இங்கு விரித்துரைக்க வில்லை.

கலா நிலயம் முன்னைய வால்யூம்கள்.

1928, 1930, 1931, 1932, 1933 வருடத்திய வால்யூம்கள் வேண்டுவோர் உடனே பெற்றுக்கொள்வது நலம்.

வால்யூம் ஒவ்வொன்றின் விலை:—பைண்ட் செய்யாதது ரூ. 7-8-0. ஆப் லெதர் கில்ட் பைண்ட் செய்தது ரூ. 9-0-0. தபால் அல்லது ரயில் கட்டணம் வேறு.

சூளாமணி

[620-வது பக்கத் தொடர்ச்சி]

4. இரதநூபுரச் சருக்கம்

22. மேலே தோலாமொழித் தேவர் அவ்வரசனுடைய அரசாட்சியின் பயனை ஆறு பாடல்களால் நமதுமனதிற்படுமாறுஎடுத்துரைக்கின்றார். ஒழித்துக் காட்டணிமுதலிய அணிகள்ததும்பப் பிற்காலத்தார் "வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன" என்று பாடத்தொடங்கியது இந்தத்துறையில்இறங்கிக்குளித்துத்திளைத்த இன்பப்பெருக்காலேயேயாம்.

இவ்வாறு அறிவு ஒளிரும் அரசனை விஞ்சையர் வேந்தனே, அருளின் வடிவமான வெண்கொற்றக் குடையை அரசக்குறியாகக் கொண்டவன்; அவ்வருளால் உலகை முன்னே கூறியபடி வென்றவன்; செங்கோல்கொண்டு உலகிலே தீமைபடாதபடி ஓம்பிவருகின்றான். அதற்கு இணையானசெங்கோலேஇல்லையாதலின் தனிக்கோலாக விளங்குகிறது. ஈரரசு அந்நாட்டில் இல்லையாதலின் ஒற்றைத் தனிக் கோலாகவும் விளங்குகிறது. அவ்வாறு அவன் அரசுபுரிந்து வருங்காலத்தில் ஒருகுற்றம் உண்டு என்றுகூறித் திகைக்கச் செய்கின்றார் தேவர். யாதோ அக்குற்றம் ? குணங்களற்ற கீழ்மக்களிடத்தே அவ்வெண்குடையும் செங்கோலும் அருளைப் பொழியவில்லை. அவர்கள் மனம் போனபடிபோய் அலையவிடாது அவர்களுக்குத் தொடக்கத்தே மிகமிகக் கைக்கும் நல்வழியிலே புகுத்தி அவ்வெள்ளத்தே அழுத்திவிட்டன அக் கோலும் அக்குடையும் அவ்வரசனும். அருள் என்றும்அறம் என்றும் இன்பம் என்றும் எழுந்தவற்றிற்கு இவ்வெருளும் இம்மறமும் இத்துன்பமும் மாறுபோலத் தோன்றவில்லையோ? இந்த வஞ்சகப்புகழ்ச்சியுள் ஒருபெரிய உண்மையும் விளங்குவதைக் காண்கின்றோம். எரிகின்ற பெருநெருப்பில் எரியாதன இல்லையே. பேரறத்திலே மறமும் அறமாம்; பேரின்பத்தில் துன்பமும் இன்பமாம். பயிர் வளர்த்தல் போலக் களைகட்டலும் வேண்டப்படுவதொன்றே என்றார் திருவள்ளுவர். கீழோரை மேலாராக்கி அறவழியிலே இன்பத்தில்திளைக்கச்செய்தலின் அருளும்அறமும் இன்பமுமன்றி வேறியாது உள்ளது.

23. அமைதி கூத்தாடும்போது அவ்வரசனுடைய செம்பொன்முடி நீண்டுவிளங்கி அறத்தை உயர்த்தி ஒளிர்கிறது. போரென்று எழுந்தால் தீமையைச் சீறி வெம்பும்வேலோ மேலோங்கிஒளிர்கின்றது. இவ்வறநிலைக்கும் இம் மறநிலைக்கும் உள்ளூடே நின்றொளிரும் அறிவுவடிவாகநிற்குமக்களைத் தனக்குக் குடிகளாகப் பெற்றபேறுடையான் இவ்வரசன். அத்தகைய நாட்டை அவர்களிற் சிறந்த அந்நம்பி ஆள்கின்ற நாளில் நடுங்கியவர் ஒருவரும் இல்லை. இவனாலும் நடுக்கமில்லை; பிறராலும் நடுக்கமில்லை; குடிகளும் நடுக்கமற்ற அறிவுடையார். பின் நடுக்க மேது? ஆனால் நடுக்கமும் உண்டு. அஃது ஓர் இடத்திலே காண்கிறார் தோலாமொழித்தேவர். உயர்வுக்கே ஊன்றுகோலாகநிற்கும் கொழுகொம்புகளின் மேலே மிகமிகஉயர்ந்து அசைதரும் இயற்கை மாடங்களின்மேலே கொடிகள்நடுங்கினாற்போல அசைவதைக் காண்கின்றார். வேறெங்கும் இந் நடுக்கத்தைக் காண்கிறார் இல்லை.

24. உறங்குமாயினுமன்னவன்தன்னொளிகறங்கு தெண்டிரை வையங்காக்கும் அன்றோ? இச்செங்கோலொளியைத் திருமுடியி னொளியாகக் காண்கின்றார் தோலாமொழித் தேவர். பண்டைய மரபின்வழியே வளரும் திருமுடி. மின்னிப் பொலிந்து அவ்வொளி எங்குமே பரந்தொளிர்கின்றது. வாடாது பச்சைப் பசேர் என விளங்கும் மந்தாரக் கோத்துப் பொன் மலர் நாற்றமுடைத்தாய் அழியாப் பேரின்பமே பூத்து விளங்கினாற்போலத் திகழ்ந்து அவன் தலைமுடியிற் றுதைந்து நிற்கின்றது. அத்தகையவனுடைய அத்தகைய ஆணையினொளி உலகெங்கும் மிளிர்கின்றது. அந்த நாளிலே ஆடவர் அனைவரும் நிலைபெற்று நிற்கின்றனர். இத்தகைய காவல்மிக்க நாட்டிலே, காவலன் ஒளிநிழலிலே, வெற்றிமிக்க ஆடவர்எதிரே வில் வளைப்பார்யார்? வேறெவ்விடத்தும் காணக்கிடைக்கவில்லை. ஆனால் ஒருகூட்டத்தார் வில்லை வளைக்கின்றனர். வில்வளைப்பாரோ பெண்கள். என்னே வியப்பு. உண்மை யாது? திருமகளே போன்ற வடிவழகு உடைய மகளிர் தத்தம் கணவர்மேலே தத்தம் புருவச்சிலையைவளைத்துவெல்கின்றனர். இவ்வின்பப்போரேயன்றி வன்புப்போரென்பது இல்லவேஇல்லை இந்த நாட்டில்.

25. வெள்ளிய அருள்நிலவு பொழிந்துஅனைத்தையும் வென்று தனிநின்றோங்கும் வெண் குடையைக் கொண்டான் அவ்வரசன்; அவனுடையபுகழை என் என்று சொல்வது? எண்ணிலாப் புகழான் அன்றோ! அவன் ஆட்சி இனிதே யன்றோ எங்கும் செல்கிறது. இந்நாளில் இப்புகழுலகிலே இவ்வருளுலகிலே பசியுமுண்டோ? ஆனால் உண்ணாத வாயும் பலவாயின அந்நாட்டில். எங்குக்காண்கின்றோம்? காமக்கலங்களாம் பரத்தையர்தம் வாயைப்பாருங்கள். பரத்தையர்வழி ஒழுகுவார் ஒருவரும் இல்லையாதலின் கண்ணன்ன காதலரோடு காமச்சுவை யுண்டுகளிக்கும் வாயற்றுத் திகைக்கின்றனர் அப் பரத்தையர்.

26. மக்களானவர் இவ்வரசநெறி நிற்பது வியப்போ? மாக்களாய்க்கீழானவரும்இவனுடையதாளின் நிழலே நோக்கி அருளறவழியில் அச்சத்தால் சிறிது நாள் அடங்குவதுபோலன்றி, நிலையாகவே என்றும் நின்றுவைக, அதன்பயனைக முன்னர்உலகத்திற்கஞ்சி மறவழியிற் புகுந்தார் இதுபோது வையத்தை அருளறிவுவெள்ளம்புரளும் இன்பவுலகமாகக் கண்டுமகிழ்ந்துவாழ்கின்றனர். இந்தப் பெருமாற்றத்தை இவ்வரசன் உண்டுபண்ணியது எங்ஙனம்? அறிவின் நுட்பத்தால் நுனித்து ஆண்டு வருகின்றமையிலே இந்த உளவைக் காணலாம். கீழோரும் மேலோரானால், கட்டுப்பட்டுவிலங்குண்டு சிறைப்பட்டுப் புலம்புகின்றவர் அந்நாட்டில் இருப்பது எங்ஙனம் கூடும் ? ஆனால் அந்நாட்டில்மிகமெல்லிய பொருள்கள் கட்டுண்டன; அப்படிக்கட்டுண்டதும் யார் கையால்? அன்பே வடிவாம் தாயர் கையாலன்றோ? கட்டுண்டவர்களும்மிக அழகிய பெண்களாவார்;விம்மக்கேட்கவேண்டுமோ? என்னே வியப்பு ! ஆனால் அக்கட்டும் விம்முதலும் என்ன? "தாக்கணங்கனையார்தம் தாயரால் வீக்கப்பட்டன மென்முலை விம்முமே." வீக்கப்படுதல், விம்முதல் என்றசொற்கள் இரட்டுற மொழியப்பட்

டுச் செயற்கையாகத் தோன்றாமல் இயற்கையாகவே பாவலருள்ளத்தோடியைந்து அழகுறுதல் காண்க.

27. இவ்வாறு இவனுடைய அரசாட்சியால் திருத்தமுற்ற விஞ்சையருலகை இவன் ஆண்டபொழுதும் சில பொருள்கள் வாயாற் கடியவாயின. பிற நாடுகளில் வாயாற்கடியார், கடுஞ்சொல் கூறுவோரே யாம். ஆனால் இந்நாட்டிலோ வாயாற் கடியவாயின கள்ளவிழ் தே மலர்களேயாம். இங்குச் சொல்லில்அன்றிப் பொருளில் கடுமையில்லை. கடியவாயின எனில் நறுமணங் கமழ்வனவாயின என்பதுஅன்றோ பொருள். அடியவாவிப் பிறரால் அடிபட்டு, அதனால் பயப்பட்டு அடங்காநின்று அலர் (பழி) கூறப்பெறுகின்றஅத்தகைய கொடியவாயின அந்நாட்டில் இல்லாமற்போகவில்லை. கொங்கவிழ் சோலையைப் பாருங்கள். அடிப்புறத்தே பயம் (நீர்) பட்டு (பெற்று) அடங்காமல் விரிந்தனவாய சோலைகள் பூக்களோடு பூத்துஒளிரும் பூங்கொடிகளோடு விளங்கின. இங்கும் சொல்லன்றிப் பொருளைக் காண்கிலோம்.

இனி, வஞ்சகப்புகழ்ச்சியையும்இரட்டுறமொழிதலையும் ஒழித்துக்காட்டணியையும் மறந்து இக்காட்சியைச் சிறிது உற்று நோக்குவோம். முன்னெல்லாம் அவ்வானாட்டை உண்மைமுகத்தால் புனைந்துரைத்த தேவர் இந்தப்பாடல்களில்இன்மை முகத்தால் அழகுபடப் புனைந்துரைக்கிறார். அவர் கண்ட காட்சியின் பெருமையைஇவற்றிலேயும் செவ்விதின் காணலாம். அருளின்மை இல்லை; நடுக்கம்இல்லை; வில் வளைப்பார் இல்லை; உணவிலாது பட்டினிகிடக்கும் வாய்கள் இல்லை. கட்டுண்டு சிறைப்பட்டுப் புலம்புகின்றவர் இல்லை; அதாவது சிறைச்சாலை யில்லை. அடிபடுவார் இல்லை; அஞ்சுவார் இல்லை. பழிக்கப்படுவார்இல்லை. கொடியவர் இல்லை. கடிய பேசுவார் இல்லை. 'அச்சமே கீழ்கள தாசாரம்'என்றார் திருவள்ளுவர்; அன்பொடு புரளும்அறிவுலகத்திலன்றிஈதொழியுமோ "அச்சமில்லை அச்சமென்பதில்லையே" பட்டினியில்லா உலகைக் கண்ட நம் தோலாமொழித் தேவர் 'தனியுலகினி லொருவருக் குணவிலை யெனில் சகத்தினை யழிப்போமே' என்று பாடியவரின் முன்னோன்றல் அன்றோ? சிறைச்சாலையையும்அடிப்பாரையும் அழித்தொழித்த தோலாமொழித் தேவரை மேனாட்டிலே சீர்திருத்தத் துறையில் முன்னணியில் நிற்கிறவரும் புகழ்வார் அன்றோ? பிரஞ்சுநாட்டுப் புரட்சி சிறைச்சாலையை இடித்துக்கொண்டன்றோ புறப்பட்டது. சிறைப்பள்ளியையும் கொடுமைகளோடுமுறைப்படுத்தியன்றோ தற்காலஉள்ளத்தியற்கைநூல்பேசுகின்றது. பரத்தையர் இல்லாத ஓருலகம் என்பதையும் நாம் குறித்துவைத்துக்கொள்ளவேண்டாவோ? இவ்வாறு அறிவுநிலவு பொழிய அருள்வெள்ளம் புரளும் ஓர் இன்பநாட்டை எக்கனாவில்காண்கிறோம். இந்நாளுக்கெனப் பாடியது போலன்றோ இப்பாடல்கள் எம்மை இயக்குகின்றன. இவ்வின்பஉலகிற் புகுந்து நாம் சிறிது அறிவுநிலவு காய்வோம்; அருள்வெள்ளத்தில் குடைந்து குடைந்து குளித்துத் திளைப்போம். உலகிற்குஇதனை முரசறைவோம். இவ்வாறுஇவ்வுலகம் மாற இறைவனை வேண்டுவோம். தோலாமொழித் தேவர் வாழ்க. அவர் கருத்து வாழ்க. அவர்கண்ட கனா மெய்ப்பிக்கப்படுவதாக. நம்நாடும்பிறநாடும் அவ்வாறு விளங்கி வாழ்க.

ஆண்மகன்பிறந்தநாட்டினும் பெண்மகள் பிறக்குநாட்டில் இத்தகைய உயரியநிலை காணப்படுதல் வேண்டும் எனக்கருதிப் புனைந்துரைக்கும் தோலாமொழித் தேவரது உள்கருத்தை உள்ளவாறுஉணர்ந்து பெண்ணின்பெருமையைவாழ்த்துவோமாக. அவ்வாறுநம் நாடும் சீர்பெற்றுயரவும் அத்தகைய பெண்மணிகள் நம் நாட்டில் பிறக்கவும் அன்றோ இறைவனை வேண்டிக்கொள்ளுமாறு இப்பாடல்கள் எம்மைத் தூண்டுகின்றன.

தற்காலக் கொள்கைகளும் தமிழும்

[622 பக்கத் தொடர்ச்சி]

இனி, தற்காலம் என்பது யாது? இச்சொற்றொடருக்குப் பலவாறு பொருள் கூறலாம். தற்காலமாவது, ஆங்கிலத்தில் மாடர்ன் பீரியட் (Modern Period)என்று கூறப்படும் காலம். அதனை 17-ஆம் நூற்றாண்டின் ஆரம்பமாகவும் கொள்வாரும் உளர்; 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் என்பர் சிலர். ஆயினும் இந்தக் கட்டுரையின் பொருட்டு 20 ஆம் நூற்றாண்டின் முதல் பாகமாகிய 25 வருடங்கள் நீங்க, இரண்டாம் பாகமாக நிற்கும் 1925-ஆம் வருடத்தினின்றுகணக்கெடுக்கும்காலமே எனக்கொள்வோம். அக்கால விஷயங்களே தற்காலத்தின் விஷயமெனக் கொள்ளப்படுகின்றது. அதாவதுஇவ்வரம்பிலேஇதுகாறும்நோக்கத்தக்கஒன்பதுவருடங்களைக்கண்ணோக்கிப்பார்ப்போம். இவை நம்முடைய காலத்தின்கோலமாகிய பிரத்தியட்சஅநுபவம்.மற்றவைஏனையோர் வாயிலாகவும் நூல்களின் வாயிலாகவும் காணக் கூடியனவேயன்றி, அடியேன் சொந்த அநுபவத்தைக் கொண்டு சொல்லக்கூடியவை யல்ல.

தற்காலத்துவம்என்பது தற்காலத்தில் ஒவ்வொருவரும் தம் உள்ளத்தில் கொண்டாடுகின்ற உண்மைச் சமயம்என்னலாம். அதாவது, ஏட்டுச்சுரையாகவே நிற்கும் சமயமல்ல. தற்காலத்தில் சமயம் என்பதும் ஒன்று உண்டோ என்று ஆச்சரியப்படத்தக்க நிலையில் இருக்கின்றது. மேல்நாட்டிலும் அக்கதியே, இந்நாட்டிலும் அக்கதியே. பக்தி என்பது வெளி வேடமாய் நின்றுவிட்டது.

நமதுகோயில்களை உற்றுநாம்நோக்குவோமாயின் அதனினும்எத்தனையோ அநியாயம்காணக்கிடக்கின்றது. சிவன்கோயிலுக்குச் செல்லுபவர் மிகவும்சிலராகக் காணப்படுகின்றனர். விஷ்ணுகோயில்களில் பிரஸாத விநியோக காலங்களிலாகிலும் கூட்டம் காணலாம். விபூதி கிடைக்கும் நமது கோயில்களின் தரிசனத்துக்கு வருபவர் அந்தோ பசியறியாதவர்களாய்த்தான் இருக்கவேண்டும். அங்கே புசிப்பதற்கும் உணவில்லை, வசிப்பதற்கும் இடமில்லை. வெள்ளிக்கிழமை தோறும் இரவில் கூட்டம்கூட்டமாகஆண்மக்களும் பெண்மக்களும் சென்றநூற்றாண்டில் கோயிலுக்குச் சென்றனராம். இப்போது அத்தகைய கூட்டங்கள் திருவிழாவிலும் காண்பது அரிதாகி இருக்கின்றது. இப்பொழுது கோயிலுக்குள்ளே செல்கின்ற சிற்சில

ஜனங்களுமெங்குப் பெரும்பாலும்காணப்படுகிறார்களென்றால் — நவக்கிரகப் பிரதிஷ்டையைச் சுற்றினுமே. இதிலிருந்துகோயிலுக்குச்செல்லும் பக்திஎத்தகையதென்று நாம் அறிந்துகொள்ளலாமே. பெரும்பாலும் கோயிலுக்குச் செல்லும் ஆர்வம் மக்களிடம் காணப்படவில்லை.தமிழ்க்கல்வியோமுன் இருந்ததைக் காட்டினுமிப்பொழுது அதிகரித்ததென்றேசொல்ல வேண்டும்.

"குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே"

—அப்பர்

என்னும் தேவாரச் செய்யுள் முதலியவற்றை இக்காலத்தவர் பலர் அறிந்தவர்களே. ஆயினும் அவர் ஒழுக்கத்தைத் தமிழ் மறைகள் மாற்றவில்லை. இவ்வாறு சமயமென்பது எந்நாட்டிலும் எக்கொள்கையரிடத்திலும் தலைதடுமாறி அவ்வம் மறைகளுக்கு மாறாகி நிகழும் காரணம் யாதென்று ஆராய்வோம்.

எங்கெங்கும் சுயநலம்என்பதுமுதற்றன்மையான கொள்கையாய்,உலோகாயத மதமே சம்மதம் என்று சொல்லாமற் சொல்லும் செய்கைகளே எத்துறையிலும் பின்பற்றித் தொடர்கின்றன. சிவனை வழிபட்டவர் இப்பொழுதோ குபேரனைவழிபடுவதே முதற்பணியாகக் கொள்கின்றனர். இவ்வாறு உலகத்தில் சமயமென்பது சுழல்காற்றிடைப்பட்ட பஞ்சுபோல் நிலைகுலைந்து,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே."

என்னு மந்தப் பவணந்திசூத்திரம் நடவடிக்கையில் இன்று செவ்வனே பயன்படுவது காணலாம். அவ்விலட்சணமும் முக்கியமாய்அவ்வத்தேசத்திலுள்ள இலக்கியங்களில் வெளித்தோன்றிக் காணப்படுகின்றது. இங்கிலாந்து முதலிய ஐரோப்பியநாடுகளில் சமயமும் கடவுள்வழிபாடும் எவ்வாறிருப்பதென்பதும் பொது ஜனங்களின் போக்குஎவ்வாறிருப்பதென்பதும் தற்காலத்தில் வெளிவரும் நவீன நூல்களால் விளங்கலாம்.சென்றநூற்றாண்டில்ஹக்ஸ்லி(Huxley) டின்டல் (Tyndall) முதலிய இயற்கைத் தத்துவ சாஸ்த்திரிகள் நாஸ்த்திகராக இருந்தாரெனத்தெரிய வருகிறது. இக்காலத்துமேலான இயற்கைத் தத்துவ சாஸ்த்திரிகளான சர்.ஆலிவர். லாட்ஜ் (Sir Oliver Lodge); வில்லியம் க்ரூக்ஸ் (William Crookes) முதலானோர் தெய்வபக்தியுடையவர்களாகவேகாணப்படுவதுமன்றிச் சமயத்துக்குமுதுகெலும்புகொடுக்கும் வைத்தியர்களாகவும் இருக்கின்றனர். தெய்வத்தைப்பழிக்குமிடமென்று ஏசப்பட்ட இடங்களெல்லாம் உண்மையான ஓர் தெய்வவழிபாடு நிறைந்தும், தெய்வவழிபாட்டுக்கென இக்காலநிலையில் ஏற்பட்ட இடங்களாகவும் காணப்படுகின்றன.

இயற்கைத்தத்துவசாஸ்திரம் அல்லது விஞ்ஞான சாஸ்திரம்என்று கூறப்படுகின்றமேல்நாட்டு ஸ்தூல வடிவ ஆராய்ச்சிச் சாஸ்த்திரம் (Physics), கடவுள் என ஒருபொருள் உண்டோஎன்றும் அதைப் பூதக்கண்ணாடியாலாகிலும் அல்லது தூரதிருஷ்டிக் கண்ணாடியாலாகிலும் காட்டக்கூடுமோ என்றும் கேள்விகளைக்கேட்கும்படி சென்றநூற்றாண்டிலிருந்த ஐரோப்பிய சாஸ்திரிகளுக்கும் அதைக்கற்ற இத்தேசச்சில கல்விமான்களுக்கும் இடந்தந்தது. ஆயினும் அதில் நூதன விஷயங்கள் மேலும் மேலும் வெளிவர, பூதக் கண்ணாடியும் தூரதிருஷ்டிக் கண்ணாடியும் கொண்டே இயற்கையில் கடவுள் விளங்கும் இலக்கணத்தை நாம் காட்டுதல் இக்காலத்தில் எளிதாக இருக்கின்றது.

தூரதிருஷ்டிக் கண்ணாடியாலும்,அதன் வழி வருமொளியை ஆராயத்தக்க கருவிகளாலும் இதுவரையிலும் கண்டறியாத நட்சத்திரமண்டலஉண்மைகள் பலவற்றைநாம்இப்போது கண்டுபிடிக்கலானோம்.சூரியனையும் அதைச் சுற்றி யோடும் கிரகங்களையும் எவ்வாறுஒருஅண்டமென எடுத்துக்கொள்ளக்கூடுமோ அதுபோல ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு பெரிய அண்டமென்றும், நாம் காண்கின்ற நட்சத்திரங்களெல்லாம் சூரியர்களென்றும்,அதைச்சுற்றிப் புதன் வெள்ளி, பூமி, அங்காரகன், குரு, சனி முதலியவற்றின் இலக்கணமுடையகிரகங்கள் ஓடுகின்றனவென்றும் தெளியலாயினோம். ஆதலால் ஞானவாசிஷ்டத்தில் காணப்படும் லீலை கதை உண்மையாகவே நேர்ந்திருக்கக்கூடியதென்று அனுமானிக்கத்தக்க ஆதரவுகள் இப்பொழுது கிடைக்கின்றன. இவ்வாறு தூரதிருஷ்டிக்கண்ணாடி பயன்படுகின்ற சமயத்தில் பூதக்கண்ணாடியும் அதற்கு ஒத்தசில கருவிகளும், சூக்குமஅணுக்களுக்கும் பரமா அணுக்களுக்குமுள்ள சம்பந்தத்தை வெளியாக்கின. அதனால் ஒவ்வொரு சூக்கும அணுவும் ஒரு சூரியஅண்டம்போல் இடையே ஒரு சூரியனும் அதைச் சுற்றிலும் வெகு வேகமாய் ஓடும் கிரகங்களும் அமைந்திருக்கும் முறையை நாம் அறிகின்றோம். அதனால் மணிவாசகப் பெருமான் கூறியவாறு,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழைக் கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் தெரியின்
வேதியன் றொகையோடு மாலவன் மிகுதியுந்
தோற்றமும் சிறப்பு மீற்றொடு புணரிய.........

(திருவாசகம் - திருவண்டப்பகுதி)

என்னலாம்.

இனி விஞ்ஞானசாஸ்த்திரம் வளர வளரஅணுவுக்கு அணுவான சிறு உலகங்களிலுள்ள ஜீவர்களின் இலக்கணமும் மகத்துக்கு மகத்தாயுள்ள அண்டங்களிலுள்ள ஜீவர்களின் இலக்கணமும் நாம் அறிந்துகொள்ளுவதுடன்அவர்களுடன்சம்பாஷிக்கக்கூடிய திறமையும் பெறுவோமென்பது திண்ணம். உருவத்தில் பெரியது சிறியது என்பது மாறக்கூடிய ஓர் விஷயமென்றும் ஸ்தூலமானதுஒருநிலை உடையதுஅல்லவென்றும் மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திரம் வெளியாக்கிக்கொண்டு வருகிறது. அநுமான் விஸ்வரூபம் எடுத்தது பொய்யல்லவென்றும் அம்மாதிரி நாமும் எடுக்கக்கூடுமென்றும், வேகம் அதிகரிக்க அதிகரிக்க உருவப்பெருக்கு அதிகரிக்குமென்பதும் அவ்வதிகரிப்பின் கணிதம் இன்னதென்றும் சரிவரக் கணக்கெடுத்திருக்கின்றனர்—

[$M = \frac{Mo}{\sqrt{1-\frac{v^2}{c^2}}}$ the Mass m is sometimes called the apparent mass of the particle. It appears that

m increases as v increases and becomes infinite when v=c the velocity of light—the central controlling force of the Universe.] ஓயாத நடனஞ் செய்யும் பசுபதி, பொருள்கள் வேகம் அதிகரித்துத் தலைதடுமாறுதபடி வேகத்தை யடக்கி உருவங்களை மாறுதபடி காக்கின்றான். அவ் வாட்சிநடனம் ஒரு கணம் நிற்குமாயின் அந்தக்கணமே பிரளயமுண்டாகும். இதை யெண்ணியே மணிவாசகப் பெருமான் "வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க" என்று கூறினார் போலும். ஆயினும் நமது வேகத்தை மனம் போனவாறு அதிகரிக்கச்செய்யத்தக்க கருவிகள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. ஆயினும் நமது முன்னோர் புறப்பொருள்களில் கருவிகள் தேடாமல் அகத்தின் கண்ணே யுள்ள கருவிகளைக் கொண்டு எண்ணிய கருமங்களைமுடித்தனர். தாயுமானார் சித்தர்கணங்களைப் பற்றிய இலக்கணத்தை வெளியிடுங்கால் இத்தகைய போக்குவரவுக்கேற்றசக்திகளைக் குறிப்பிடுகின்றனர்.

"திக்கொடு திகந்தமும் மனவேக மென்னவே
சென்றோடி யாடிவருவீர்
செம்பொன் மகமேரு வோடு குணமேரு என்னவே
திகழ்ந்துருவம் அளவளாவி
உக்ரமிகு சக்ரதர னென்ன நிற்பீர் கையில்
உழுந்தமிழும் ஆசமனமா
வோரேழு கடலையும் பருகவல்லீர் இந்திரன்
உலகும் ஐயிராவதமுமே
கைக்கெளிய பந்தா யெடுத்து விளையாடுவீர்
ககன வட்டத்தையெல்லாங்
கடுகிடை யிருத்தியே அஷ்டகுல வெற்பையுங்
காட்டுவீர் மேலும்மேலும்
மிக்க சித்திகளெலாம் வல்லநீ ரடிமைமுன்
விளங்கவரு சித்தியிலையோ
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே."

இவ்வாறு தாயுமானவர் சித்தர்கணப் பதிகத்தில் அவர்கள் சித்திகளெனக் காட்டிய யாவும் நிறைவேற்ற மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திரம் முயற்சி செய்து வருகின்றது. மனோ சக்தியாலே இங்குள்ளவன் அமெரிக்க தேசத்தினில் இருப்பவனிடம் பேசவும் (Telepathy) அங்குள்ளவர்களைச்செவ்வனே காணவும் (Television) ஞான திருஷ்டி பெறுவதற்கும் அதை விருத்திசெய்வதற்கும் பாடசாலைகளும் உண்டாக்கப் பட்டிருக்கின்றன. (Tele-travel) தூர இடங்களுக்கு நினைத்த அந்தக்கணமேசெல்லக்கூடிய ஒரு சக்தியை இன்னும் மேல்நாட்டார் கண்டுபிடிக்கவில்லை. ஆகையால் இக்கால் விஞ்ஞானக் கலையாலேயே, ஒரு ஜீவனது மனோசக்திக்கும் மற்றொரு ஜீவனது மனோசக்திக்கும் இடையே, அறிவும் வலிவும் பொருந்திய ஒருவகைச் சூக்குமஆகாயம் நிறைந்து இருக்க வேண்டுமென்பதை இதனால் நாம் நிரூபிக்கலாம். இவ்வாறு மேல்நாட்டில் அன்பைப் பெருக்குவதும் அறிவைப் பெருக்குவதுமான இலக்கணங்கள் அமைந்த உழைப்பு விருத்தியடைகின்றது.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[618-வது பக்கத் தொடர்ச்சி]

3. பாரதக்கதை நர - நாரணர் விசயமாகும்.

பாரதக்கதையில் போர்வீரர்கள் பலர் உளர். குணசாலிகள் பலர் உளர். வணங்காமுடி மன்னன் முதலானோரில் கதாநாயகனாக வெடுத்துக் காட்டக்கூடியவன் ஒருவனுமில்லை. இடைவள்ளலில் ஒருவனாக வெடுக்கப்பட்ட கர்ணனும், இருந்தபோது பெற்ற சிறப்பைக்காட்டிலும் இறந்தபின் சிறப்பு அதிகரிக்க விளங்கினானெனினும், கதாநாயகனா யவனையும்எடுத்துக்காட்ட ஏலாது. பீஷ்மனும் வீரத்திலும் பெருந்தன்மையிலும் மிக்கிருந்தும், பாரதப்போரில் இருதிறத்தோரு மடிவணங்கும் நிலையிலிருந்தானாயினும் கதாநாயக விலக்கணம் பெற்றிலன். பின்னும் திரிதராட்டிரன் விதுரன் முதலியோரைப் பற்றிச்சொல்ல வேண்டியதே யில்லை. பாரதப்போர் யாருக்காக நடந்ததோ அப்பெருந்தகையையும்கதாநாயகனென்னலாகாது. தருமராசன் உரிமையை நிலைநிறுத்தப் பாரதப்போர் நடந்தும் வீமசேனனுக்கும் அருச்சுனனுக்கும் உள்ள ஒளியானது தருமராசனைநாம் சரியாகக்காணமாட்டாதபடி மறைத்துவிடுகின்றது. வீமன் அருச்சுனனைவிடச் சிறந்த பக்தன், தேகசக்தியும் வாய்ந்தவன்; ஆயினும் பார்த்தன்தான் இப்பாரத சரிதைக்கு நடுநாயகமாய்த் திகழ்கின்றான். ஆகையால் தேவாரம் பாடிய நமது சமயகுரவர் பாரதக்கதையைக் குறிக்குமிடங்களில் பார்த்தனுக்குச் சிவன் அருள்செய்தவிஷயமே முக்கியமாய் விளக்குகின்றது.

காத்திலேனிரண்டும்மூன்றும்கல்வியேலில்லையென்பால்
வாய்த்திலேனடிமைதன்னுள்வாய்மையால்தூயேனல்லன்
பார்த்தனுக் கருள்கள் செய்த பரமனே பரவு வார்கள்
தீர்த்தமே திகழும் பொய்கைத் திருப்புக லூரனீரே
திருப்புகலூர் பண் - திருநேரிசை 7.

இக்கருத்தையே பின்னும்,

பார்த்தனுக் கன்று நல்கிப் பாசுப தத்தை யீந்தாய்
நீர்த்ததும்புலாவுகங்கைநெடுமுடிநிலாவவைத்தாய்
ஆர்த்துவந்தீண்டுகொண்டலணியணாமலையுளானே
தீர்த்தனே நின்றன் பாதத் திறமலால் திறமிலேனே
திருவண்ணாமலை - திருநேரிசை.

பார்த்தனுக்குப் பாசுபதம் நல்கிய விவரம் பின்வருமாறு அப்பர் தேவாரத்தில் விளக்கப்பட்டது—

அரும்பெருஞ்சிலைக்கைவேடனாய்விறற்பார்த்தற்கன்
றுரம்பெரிதுடைமைகாட்டி ஒள்ளமர்செய்துமீண்டே
வரம்பெரிதுடையனாக்கிவாளமர்முகத்தின்மன்னுஞ்
சரம்பொலி தூணி யீந்தார் சாய்க்காடு மேவி னாரே
—திருச்சாய்க்காடு - திருநேரிசை - 4

அருச்சுனன் தவத்திடை தோன்றி அருள் செய் வேடனாய்ப் போர்தொடுத்து அதன் பின்னர் அருள் செய்த காரணம் யாது?

பார்த்தனோடமர்பொருதுபத்திமைகாண்பர்போலும்
கூர்த்தவாயம்புகோத்துக்குணங்களையறிவர்போலும்
பேர்த்துமோராவநாழியம்பொடுங்கொடுப்பர்போலும்
தீர்த்தமாம் பழனை மேய திருவாலங் காட னாரே
—திருவாலங்காடு - திருநேரிசை - 5

சிவபெருமானுடன் அருச்சுனன்போர்செய்தான். ஆயினும் அறிந்து செய்தவனல்லன். இவன் சிறந்த சிவபக்தன். அவனுடன் போர்செய்த சிவபெருமானும் பத்திமைகண்டு குணங்களையறிந்து சரங்கள் நிறைந்த அம்புக்கூடு தந்தார்போலும். சாத்தனை மகனாகவைத்ததும் பாம்பரை யாடவைத்ததும், மதியம் கங்கை,*கோளரா இவற்றை வைத்ததும் ஒருவகைக் கருத்தேயென அப்பர் கூறுவார். ஆயினும் அக்கருத்து எக்கருத்தென நிச்சயிக்கக்கூடவில்லை. ஆயினும் இலங்கை மன்னனைக் கைலையின்கீழ் அடர்ந்த செய்கையும், பார்த்தனோடு அவர் பொருது படைகொடுத்தருளியதும், கங்கைதன்னைத் திருச்சடையில் வைத்ததும் ஏழுலகமும் ஏத்தத்தக்க செய்கை யென்பர் வாகீசர்:—

ஆர்த்தெழு மிலங்கைக் கோனை
  அருவரை யடர்ப்பர் போலும்
பார்த்தனோ டமர்பொருது
  படைகொடுத் தருள்வர் போலும்
தீர்த்தமாங் கங்கை தன்னைத்
  திருச்சடை வைப்பர் போலும்
ஏத்தவே ழுலகும் வைத்தா
  ரின்னம்ப ரீச னாரே.

—திருவின்னம்பர்—திருநேரிசை 10.

ஆகையால் அருச்சுனன் வெற்றியே பாரதத்தின் நடுநாயகமாகும். தேவேந்திரனுடன் சென்று நிவாதகவச காலகேயர்களைக் கொன்ற கிரீடி, பாசுபதாஸ்திரத்தைப் பெறுவதற்கு முன்னரும் வில்வித்தையிற் சிறந்தவன். சவ்விசாசியாய் வில்லை வளைத்து முன்னுக்கும் பின்னுக்குமாகப் பாணங்களைப் பிரயோகஞ் செய்யக்கூடியவனாய் இருந்தான். இத்திறமையாலேயே பாஞ்சாலியின் சுயம்வரத்தில் விற்பரீட்சையில் வெற்றிபெற்றான். காண்டகவனத்தையும் இந்திரன் காண அக்கினிக்குத் தத்தஞ் செய்தான். இவ்வாறு பார்த்தன் தோல்வியென்பதே அறிந்திலன். ஒற்றைத் தேருடன் செல்லும் போர்வீரனைக் கண்டா லவனை அருச்சுனனென்றே பாரதவீரர் அனுமானிப்பர்.

பாரதப்போர் முடிந்து தருமராஜன் அரசாட்சி செய்து கலியுகம் வருந் தருணத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுடன் அருச்சுனன் சக்தி மறைந்தது. எதிர்த்தவேடர்களை வெல்லும் திறனிலனாய் நின்றனன். ஆகையால் இவன் சனனகாலத்திருந்து கண்ணனுடன் ஒரே சக்தியாய்ச் சம்பந்தம்பெற்று நின்றானென்பது விளங்கும். சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்யச்சொன்னதும் கண்ணனேயாம். எனவே, அருச்சுனன் பெற்றவரப்பிரசாதங்களுக்கும் வெற்றிக்கும் பின்னிருந்தது மாயனேயாம்.

ஒன்றிய தவத்து மன்னி யுடையனா யுலப்பில் காலம்
நின்றுதங் கழல்க ளேத்தும் நீள்சிலை விசய னுக்கு
வெற்றிகொள் வேட னாகி விரும்பிவெங் கான கத்துச்
சென்றருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே

—திருச்சேறை—திருநேரிசை 3.

சிவபெருமான் பார்த்தனுடன் யுத்தஞ் செய்ததே அவனுக்கு ஒருவகை வெற்றியாகும். இதனால் பாசுபதம் முவலியன பெற்று யாவராலும் வெல்லற்கரிய திறமுடையவனாய் விளங்கினான். அவ்வாறு விளங்கியும் குருக்கேத்திரயுத்தகளத்தில் சண்டைசெய்ய அவனுக்கோ மனம் பிடிக்கவில்லை. உலகபாரத்தை நீக்கும் வண்ணம் அவதரித்த திருமால் சாரதியாக விருந்து அவனுக்குப் பகவத்கீதையைப் போதித்து யுத்தத்தில் முனைய வைத்தார். ஆகையால் விசயன் பாரதவெற்றி யென்பது நரனும் நாரணனும் சம்பந்தமாய்ப் பெற்றதாகும். இதனில் ஒருவரைவிட்டு மற்றொருவரைத் தனித்து நோக்க இடமில்லை.

* பார்த்தனுக்கருளும்வைத்தார்பாம்பரையாடவைத்தார்
சாத்தனை மகனா வைத்தார் சாமுண்டி சாம வேதங்
கூத்தொடும் பாட வைத்தார் கோளரா மதியம் நல்ல
தீர்த்தமுஞ் சடைமேல் வைத்தார் திருப்பயிற் றூரனாரே.
—திருப்பயிற்றூர் - திருநேரிசை 4

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[587-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம்பத்து, 10-ம் தசகம்.
9-ம் பாசுரம்.

வந்தாய் போலே வாராதாய்
  வாரா தாய்போல் வருவானே
செந்தா மரைக்கட் செங்கனிவாய்
  நாற்றோ ளமுதே யெனதுயிரே
சிந்தா மணிகள் பகரல்லைப்
  பகல்செய் திருவேங் கடத்தானே
அந்தோ வடியே னுன்பாத
  மகல கில்லே னிறையுமே.

உரை:—வந்தாய்போலே வாராதாய் - உன்னிடத்தில் உண்மைப்பக்தியில்லாதவர்களிடத்தில் வருவதுபோல்தோன்றி அவர்களுக் கெட்டாதவனே, வாராதாய்போல் வருவானே - உன்னிடத்தில் அந்தரங்க பக்தியுள்ளவர்களாய், நீ வருவாயோ, நாம் எளியோமே, என்று பயப்படுபவர்களிடம் கிட்டிவந்து உதவுபவனே, செந்தாமரைக்கண் செங்கனிவாய், நாற்றோள் அமுதே - நாலுபுஜங்களையுடையவனாய்ப் பக்தர்கள் ஆநந்தமாயனுபவிக்கும் திவ்விய வடிவுடைய அமிர்தமே, எனது உயிரே - நீ வேறின்றி எனதுயிருடன் கலந்து நிற்பவனே—உன்னாதரவின்றிஎன்னுயிர் ஒரு பொருளாக நிற்காதென்பது தாத்பரியம். சிந்தாமணி என்பது தெய்வ லோகத்திலுள்ள சிறந்தமணி-இது எல்லாருக்கும் கற்பகத்தருவைப்போல் கேட்டதைக் கொடுக்கும் வல்லமையுள்ளது. அத்தகை சிந்தாமணி வேங்கடமலையில் திரளாக இருந்து, பகர் -'கொடுக்கின்ற ஒளியானது, அல்லை-இரவையும், பகல்செய்-பகல்போலாக்கவல்ல, திருவேங்கடத்தானே - திருவேங்கடமலையில் திருக்கோவில் கொண்டிருப்பவனே, அந்தோ- ஐயோ நான் என் செய்க! அடியேன்-தாஸனான நான், இறையும்- ஒருக்கணமாத்திரமும், அகல - உன்னை விட்டுவிட்டிருக்க, கில்லேன் - சக்தியற்றவன், ஆகையால் உன்திருவடிகளில் சேர்த்தருளவேணுமென்று கோருகிறபடி.

குறிப்பு:—முன்னரே 7-ம் பாசுரத்தில் விண்ணப்பஞ் செய்துகொண்டபடி சரணாகதியாகிற உபாயவதுட்டாநம் அடுத்தபாசுரத்தில் செய்யப்புகுகின்றார். "என் செய்க" வென்றது வேறு உய்வுக்கு மார்க்கமில்லை யென்றபடி.

10-ம் பாசுரம்.

அகல கில்லே னிறையுமென்
　　றலர்மேல் மங்கை யுறைமார்பா
நிகரில் புகழா யுலகமூன்
　　றுடையா யென்னை யாள்வானே
நிகரி லமரர் முனிக்கணங்கள்
　　விரும்புந் திருவேங் கடத்தானே
புகலொன் றில்லா வடியேனுன்
　　னடிக்கீ ழமர்ந்து புகுந்தேனே.

அவதாரிகை:—இங்குஆழ்வார் அனுட்டானம்செய்யும் மோக்ஷோபயம், பழையபடி க்லிப்தமாயுள்ள முப்பத்திரண்டு வித்தைகளில் ஒன்றாகவே யிருத்தல் வேண்டும். ஏனெனில் ஆழ்வார் வேண்டிக்கொண்டபடி பகவான் இவருக்கென்றே அஸாதாரணமான புதிதான இலகுஉபாயத்தைக் கல்பிக்கஇசையவில்லை. ஆகையால் சரணாகதி என்று பெயர்பெற்ற நியாஸம் அதாவது பரந்நியாஸ மென்ற ஷை முப்பத்திரண்டு உபாயத்தில் ஒன்றை இங்கு ஆழ்வார் தன்னால் நிர்வஹிக்கக்கூடிய வுபாயமாகக் கருதி, தாமநுஷ்டித்தாலல்லாமல் பரமபுருஷார்த்தமான மோக்ஷாநுபவம் கிடைக்காதென்று, எம்பெருமான் வாளாவிருந்தவாறே அவ்வன் முன் பணித்துள்ளபடி தம் முயற்சிகொண்டு சரணாகதி செய்யப் புகுகிறார்.

இவ்வுபாயம் கடவல்லிஉபநிஷத்தில் இரண்டு பிரிவாகஓதிஅநுட்டாநத்தில் ஒன்றாக சேர்த்துஅநுஸந்திக்கக் கட்டளையிட்டிருக்கிறது. இதையே தாந்திரக சாஸ்திரத்திலும் மோக்ஷோபாயமாகப் பஞ்சராத்திர ஸம்ஹிதைகளிலும் விதித்திருக்கிறபடி, இவ்வாழ்வாரின் அநுட்டாநம் ஆஸ்திகர் யாவரும் எவ்வருணத்தாராயினும் அநுஷ்டிக்கக்கூடியதேயென்று கற்பிக்கின்றது. இதற்கடி, துவயம்(இரண்டு)என்ற மந்திரம். இது வைதீக மந்திரமானாலும் தாந்திரக ஸம்ஹிதைகள் நியமனப்படி எவருமே அனுஷ்டிக்கக்கூடுமாகையால் அதைப் பிரஸ்தாபிப்பதனால் பாதகம் இல்லை. இம்மோக்ஷோபாயம் அந்தணர்கள் முதல் அந்தியர், கடை ஜாதியார் வரை அனுஷ்டிக்கக் கூடுமென்றே வைணவர்களின் கோட்பாடு. சுமார் 700 வருஷங்களுக்கு முன்னர் விளங்கிய பிரஸித்த வைணவாசாரியர் ஸ்ரீவேதாந்ததேசிகர் இதன் ஸ்வரூப யோக்கியதையைப் பற்றி பின்வருமாறு பாடியிருக்கிறார்.

அந்தண ரந்திய ரெல்லையி னின்ற வனைத்துலகும்
நொந்தவ ரேமுத லாக நடங்கி யநந்நியராய்
வந்தடை யும்வகை வன்றகை யேந்தி வருந்திய
அந்தமி லாதியை யன்ப ரறிந்தறி வித்தனரே.

பதக் குறிப்புக்கள்:—1. நடங்கி - இளைத்து, அதாவது கடுந்தவப் பயனடைய ஏங்கினவராய். 2. அநந்நியராய் - வேறு கதியில்லாதவராய்-அதாவது மோக்கம் தவிர வேறு பயனில் ஆசையில்லாதவராய், வேறு உபாயத்திலிழிய மனம் இல்லாதவராய். 3. வன்தகை - வன்-திருடமான அதாவது பக்தர்களின் பாபங்களாலுந் தடைப்படாமல் ஸ்வரஸமாய் அருவி ஒழுக்குப்போலச் சுபாவ ஸஹஜ பரம கிருபையாலே. 4. ஏந்தி - தன் பாரமாக வேற்றுக்கொண்டு, வருந்திய - ஸதா ஸர்வகாலமும் முயற்சி செய்துகொண்டிருக்கிற (a) "உலக மெல்லாம் நன்கொடுங்க யோகணைவான்" என்றல்லவோ திவ்விய பாசுரம். (b) ஸ்ரீகிருஷ்ண பகவானை அர்ச்சுனன் தன்கட்சிக்குப் பாரத யுத்தத்தில் துணை நிற்க வபேக்ஷிக்கச் சென்றபோது பகவான் கண்கள் மூடி யோகுபுரிவதைக் கண்டு, கண்ணன் விழித்த பின்னர், என்னயோகு புரிந்தீரென்று அர்ச்சுனன் வினவ, பகவான் லோகரக்ஷணார்த்தம் யோகுபுரிவதாயும், அதிலும்உலகத்தில்சர்வசேதநர்களும் நன்மையடையவேணுமென்றும், நல்வழிகளில் இறங்கி வழிபாடுசெய்து உய்தல் வேண்டுமென்றும், எவரேனும் தவமியற்றக் கருதியோ அக்கருத்து இல்லாமலேயோ சுகிருதம்(நற்செய்கை)இயற்றினால்அவரை மேன்மேலும் அதிலேயே மூட்டி என்னை யடைய முயற்சிசெய்யவும், இவ்விதமான சிந்தனைகள்கைகூடும்படி யோகுபுரிகிறோமென்று உரைத்தார். மேல்படி சரணாகதி மோக்ஷம் அடைய உபாயம் ஆகும்போது மந்திரமும் மேல்கண்ட துவயமே - "ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே ஸ்ரீ மதே நாராயணாய நம," என்பதே மந்திரமாகையினால் அதன் பொருளும் பயனும் ஓர் ஆசானுடைய வுபதேசத்தாலே ஏற்படல்வேண்டும். ஆயினும், அதன் திரண்ட பொருளை எடுத்தெழுதுவோம். அதாவது "ஸர்வஸ்வாமியாய் எல்லா நியாயத்தாலும் பரமாநந்தத்தை யூட்டவல்லவனாய் இலக்குமி பிராட்டியோடு பிரிவில்லாத நாராயணன் திருவடிகளில் ஸ்வரூபத்தால் அவனுக்குத் தாஸனான அடியேன் அவனுக்கேஉசிதமான எல்லாப்பணிவிடைகளும் செய்யத் தடைகளாயிருக்கும் ஸர்வபாபங்களையுங் கழித்தும் பூர்ணவநுபவம் பெறுகைக்குத் தக்கவனாய்த் தவமில்லாதஎன்னாத்மாவை ரக்ஷித்துக்கொள்ள வேண்டி எனக்கு யாதொரு பற்றுமின்றி ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளிலே ஆத்ம ரக்ஷாபாரத்தை வைக்கிறேனென்று."

சரணாகதியை, பரந்நியாஸம் என்ற சொல்லினாலே குறிப்பானேன் என்ன — பரம் என்றால், சுமதலை - அவனவன் தனக்குச்செய்துகொள்ளவேண்டிய கடமை. நியாஸம் - தனக்குரித்தான ஸொத்தைப் பிறர் கையில் ஒப்பவிக்கிறது; தன் சொத்தை விட்டொழிந்து அதனிமித்தம் கவலையற்று இருத்தல்—இவ்விரண்டு பொருளும் மோக்ஷ சரணாகதியில் பொருந்தும். எங்ஙனமெனில் - அவரவர் ஆத்மா அவரவருக்கே ஒருவிதமாய்ச் சொந்தமானதால்அதை க்ஷேமப்படக்காப்பாற்றுவதுஅவரவர்கடமையேயாகும். இக்கடமையை நான் நிர்வகிக்க வல்லேனல்லேனென்று தம் மனதால் நிரூபணஞ்செய்துஎல்லாருக்கும் அகத்தில்உள்ள கடவுள்பக்கல் அவரவர் பாரத்தை (சுமதலையை) விட்டொழிந்து கவலையற்று இருத்தல் (1) அவரவர் ஆத்மாவைப் பகவானே ரக்ஷிக்கக்கடவனாகை, சாஸ்திரஞானம் பக்தி மனனம் இவைகளாலுணர்ந்து அவனிடத்தே ஒப்புவிக்கிறது. இவ்வுபாயம் சிற்சில உபநிஷத்துக்களில் "தியாகம்" என்று பேர்பெற்று விளங்கும். "தியாகம்" என்ற பதத்திற்கு (1) "நியாஸம்" என்பதற்குஇரண்டாவதாகக் குறித்த பொருளும், "ஔதாரிய புத்தியால் நன்கொடையாக ஈதல்" என்ற வேறு பொருளு முண்டு. யாருக்கும் தன் ஆத்மாவைப்போல அருமையான வஸ்து வேறுஉண்டோ? அதைப்பிறருடைய உபயோகத்திற்காகக் கொடுப்பது நன்கொடையன்றோ? இவ்வளவு வரைக்கும் சரணாகதிதத்துவத்தைச் சாஸ்திரஸம்மதங்கொண்டு சொன்னோம். உலகரீதியைக் கொண்டு ஆராய்வோம். லௌகிகத்திலே விலையுயர்ந்த பொருள்கள் திரவியம் ஆகிய இன்னவைகளை நிரந்தரமாகவும் நாசபயமன்றிக்கேயும் காப்பாற்றும் முறையால் உதாஹரணம் கூறி நிரூபிப்போம். தான் ரக்ஷிக்கமாட்டாத வொரு வஸ்துவை ரக்ஷிக்கவல்லா னொருவன் பக்கலிலே பாதுகாப்பாய்க் கொடுக்கும்போதுதா னவன்திறத்தில் (1) நேசத்தால் அனுகூலனாயிருந்தே (2) அவனிடத்தில் தீயடானம் இலேசமுமன்றிக்கே, (3) a. இவன் ரக்ஷிக்க வல்லன் (3) b. வேண்டிக்கொண்டால் ரக்ஷிக்கவும் செய்யுமென்று உள்ளந்தேறி (4) தான் ரக்ஷித்துக்கொள்ள மாட்டாமையை யறிவித்து நீ ரக்ஷிக்க வேண்டுமென்று அபேக்ஷித்து, (5) காப்பாற்றவேண்டிய வஸ்துவை அவன் பக்கலிலே கொடுத்து, தான் தனக்கொரு பாரமுமின்றிக்கே பயம் நிவர்த்தமாகி ஸொஸ்தசித்தனா யிருப்பதைக் காண்கின்றோம். எல்லாச் சரணாகதியும் - ஆறு அங்கங்களுடையது என்பார் பூர்வத்தில் பகுத்தறிந்தோர். இவைகளைச் சரணாகதியின் சாஸ்திரத்தில் முறையே (1) அநுகூல

KALANILAYAM
REG. NO. M. 2324.

ஸங்கல்பம் (2) விரோத பாவத்தை ஒழிந்திருத்தல் (3) தம் முயற்சி ஆற்றல் இவைகளில் நாட்டமின்றி ஓய்ந்திருத்தல் (4) அந்நியன் ரக்ஷையில் விசுவாஸம் (5) அந்த அந்நியனுக்குக் கொடுத்தல் (6) தம் வல்லமையிலும் ஆற்றலிலும் ஊக்கமற்று மனந்தாழ்தலும் ஆகிய இம்முகாந்தரங்களில் உள்பொதிந்திருப்பதை ஆரியத்தில் "கார்ப்பண்ணியம்" என்பார்கள். இவ்வாறும் ஆழ்வார் அனுட்டானமான இப்பாசுரத்தில் காணும் சரணாகதியினைக் கீழ் உரையில் கண்டுகொள்க.

கலா நிலயத் தமிழ் வகுப்பு

வண்ணாரப்பேட்டை.

இவ் விலவசத் தமிழ் வகுப்பு, வண்ணாரப்பேட்டையைச் சார்ந்த சஞ்சீவராயன் பேட்டைக் கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடக் கட்டிடத்தில் ஆரம்பமாகியிருக்கின்றது. வாரந்தோறும் திங்கள் வியாழக்கிழமைகளில் மாலை 7 முதல் 8 மணி வரையில் நடைபெறும்.

வர்த்தமானம்

வாக்கறி கருவி:—ஒட்டுகள் பெட்டிகளிலிட்டு ஒவ்வொன்றாய் எண்ணப்படுவதை இலகுபடுத்தவும் இரகசியத்தைக் காப்பாற்றவும் ஏற்றதாக ஒரு புதிய ஒட்டெடுக்கும் கருவியை நியூயார்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர்நெவிட்ஹாப்கின்ஸ் என்பவர்கண்டு பிடித்திருக்கின்றார். இதற்குத்தெலிலோட் என்றுபெயரிடப்பட்டிருக்கிறது. இக்கருவி ஒட்டுக்களை மிகத் துரிதமாக எண்ணிப் பாகுபடுத்தி அறிவிக்கும் சக்தி வாய்ந்திருப்பதோடு ஒட்டுகளை இரகசியமாகப் பாதுகாக்கவும் செய்கின்றது.

ஆயுர்வேத் வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்.
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலகீஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

I.D.L.ச்யாவனப்ராசா I.D.L.பிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை

நஞ்சன்கூடு பல்பொடி

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L.61, மெடிகேடட்-டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச. சிறந்த டானிக். சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்தசிற்றுமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்

ஜவரேக் எவ்வித ஜவரங்களுக்கும்

[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஞு ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சேன்னை. } அல்லது { இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரு. 1

இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)